FRIENDS MISSIONARY PRAYER BAND

Vol 25-Issue 02 - Feb - 2025
A monthly Prayer Bulletin for
**Youth & Teens**

for young
friends of fmpb

# கொடியாய் அவரில் படர்ந்திட வா!



Private circulation only



# கூடார வாயில்

## The Gate of the Court

Rev. Selvinraj G Charles



அன்பு தம்பி தங்கைகளே! தேவன் நம்மை இவ்வுலகில் அவரைப் புகழ்ந்து போற்ற, தொழுதுக் கொள்ள படைத்திருக்கின்றார். இதற்காகத் தான் தேவன் மோசே மூலம் ஆசரிப்புக் கூடாரத்தைக் கட்டச் சொன்னார். மோசே கர்த்தர் தனக்கு கற்பித்தப்படியே ஆசரிப்புக் கூடாரத்தைக் கட்டி முடித்தார் (யாத். 39:1-40). இதன் நிமித்தம் தேவ மகிமை இறங்கி ஆசரிப்புக் கூடாரத்தை நிரப்பிற்று. ஒருவேளை மோசேக்கு 40 வயதாக இருக்கும் போது அந்த ஆசரிப்பு கூடாரத்தின் மாதிரி கொடுக்கப்பட்டிருந்தால், தன்னுடைய எகிப்தின் ஞானத்தைப் பயன்படுத்தி ஆசரிப்பு கூடாரத்தைக் கட்டியிருப்பார். ஆசரிப்புக் கூடாரம் மேன்மையாக காட்சியளித்திருக்கும். ஆனால் தேவ மகிமையை நாம் அங்கு கண்டிருக்க முடியாது. இதே சூழல் தான் சில சபைகளில் சம்பவிக்கிறது. இன்று பல ஆலயங்கள் மாளிகை போல் கட்டப்படுகிறது. ஆனால் தேவ மகிமையைப் பார்க்கமுடியவில்லை. **“என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார்” (ஏசாயா 55:8, 9).**

### கூடாரத்தில் முட்கள் (THORNS IN THE COURT):

ஆசரிப்புக் கூடாரத்தின் தரையிலுள்ள முட்கள் வெண்கலத்தால் செய்யப்பட்டிருந்தது. இவை ஆசரிப்புக் கூடாரத்தளத்தின் மடிப்புகளையும், வாயில்களையும் நங்கூரமிடுவது போல் தளத்திலுள்ள மடிப்புகளை அசையாமல் பிடித்துக் கொள்கிறது. இந்த முட்களைப் போன்று நம் வாழ்வில் எத்தனை மனிதர்கள் மற்றும் புயல் காற்று போன்று பிரச்சினைகள், போராட்டங்கள் வந்தாலும் அசையாமல் ஆண்டவரை உறுதியாய் பிடித்துக் கொண்டு, எந்த சூழ்நிலையிலும், எப்போதும் அவரைத் துதித்து கொண்டேயிருக்க வேண்டும்.

### கூடாரத்தைச் சுற்றியுள்ள தூண்கள் (PILLARS SURROUNDING THE COURTHOUSE):

ஆசரிப்புக் கூடாரத்திலுள்ள தூண்கள் நம் பார்வைக்கு கூடாரத்திற்குள் போக முடியாதபடி தடையாக இருப்பதைப்போல காட்சியளிக்கலாம். அந்நாட்களில் ஒரு சில ஆசாரியர்கள் மட்டுமே கோயிலுக்குள் செல்ல முடியும். ஆனால் புதிய உடன்படிக்கையின் கீழ் கடவுளின் வீட்டின் கூடாரத்தில் நாம் நிறுத்தப்பட வேண்டிய அவசியமில்லை. இயேசுவின் பரிபூரண தியாகம் மற்றும் நமக்காக அவர் செய்த வேலையின் காரணமாக நாம் கூடாரங்களுக்குள் மட்டுமல்ல, கடவுளின் பரிசுத்த பிரசன்னத்திற்கும் வரலாம். எந்த சடங்குகளும் நம்மைத் தடை செய்ய முடியாது. இஸ்ரவேல் மக்கள் அனைவரும் கூடாரத்தில் கடவுளைச் சந்தித்தனர். நம் அனைவரையும் தேவனைத் துதிக்க கூடாரத்திற்குள் வரும்படி அன்புடன் அழைக்கிறார். அவரருகில் செல்ல முடியாதபடி இருந்த தடையை உடைத்து விட்டார். சங்கீதக்காரன் சொல்வது போல் **“என் ஆத்துமா கர்த்தருடைய ஆலயப்பிராகாரங்களின்மேல் வாஞ்சையும் தவனமுமாயிருக்கிறது; என் இருதயமும் என் மாம்சமும் ஜீவனுள்ள தேவனை நோக்கிக் கெம்பீர சத்தமிடுகிறது” (சங்கீதம் 84:2). சங்கீதம் 100:4-ல் “அவர் வாசல்களில் துதியோடும், அவர் பிராகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து, அவரைத் துதித்து, அவருடைய நாமத்தை ஸ்தோத்திரியுங்கள்”.** அவருடைய கூடாரங்களுக்குள் (சபை) வருவதற்கான உரிமையைக் கொடுத்த ஆண்டவருக்கு நன்றிச் செலுத்துவோம்.

### கூடாரத்திற்கு ஒரே வழி (THE ONLY WAY TO COURT):

கடவுள் எப்போதும் தனக்கென்று ஒரே ஒரு வழிதான் வைத்திருக்கிறார். அந்த ஒரே வழி அவருடைய மகனாகிய இயேசு கிறிஸ்துவே.

**“அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்” (யோவான் 14:6).**

### THE THREE DOORS REPRESENT JESUS (WAY, TRUTH, LIFE)

**THE WAY:** Salvation is the first door to God. நாம் இரட்சிக்கப்பட ஒரே வழி இயேசு. அவர் ஒருவர் தான் நம்மை இரட்சிக்க முடியும். கூடாரத்திற்குச் செல்லும் வாயிலின் பெயர் பாதை (way). அதன் வழியாக தான் நமக்கு இரட்சிப்பு.

**THE TRUTH** (சத்தியம்): ஆலய அங்கத்தினராக மாற்றுவது சத்தியம். இயேசு தான் சத்தியம், இந்த உறுப்பினர்கள் பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழையும் கதவின் பெயர் சத்தியம்.

**THE LIFE** (ஜீவன்): சபை மணவாட்டியான நம்மை கடவுளின் சிம்மாசனத்திற்கு அழைத்துச் செல்கிறது. நம் வாழ்வை அல்லது ஜீவனை மிகவும் புனிதமான இடத்திற்குக் கொண்டு செல்லும் பாதை ஜீவன். இதற்கும் இயேசு ஒருவரே வழி. இந்த ஒரு வழியைக் (இயேசு) கொண்டு நாம் கூடாரம் சென்று அதன் வழியாக இரட்சிக்கப்பட்டு, பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழைந்து, அவர் வாசம் செய்யும் சிம்மாசனத்திற்குச் சென்று ஜீவன் பெற்று அவரோடு வாசம் செய்யலாம். அதற்கு ஒரே வழி இயேசு.

**வாலிப தம்பி, தங்கையே! ஆசரிப்புக் கூடாரத்திற்கு ஒரே ஒரு நுழைவு வாயில் தான் உண்டு. அதுபோல் தேவனுடைய சபையும் ஒரே வாசலைக் கொண்டது. அந்த வாசல் கிறிஸ்துவே. நீங்கள் கிறிஸ்துவின் வழியாகத் தான் சபைக்குள் பிரவேசிக்க வேண்டும் என்பதையும், அவராலேயன்றி ஒருவராலும் பிதாவினிடத்திற்கு வர முடியாது என்பதையும் அறிந்துக் கொண்டு, அந்த வழியாகிய ஆண்டவரை உறுதியாய்ப் பற்றிக் கொண்டு, அவர் தரும் அழியா ஜீவனையும், நித்திய வாழ்வையும் சுதந்தரித்துக் கொள்ள ஆண்டவர் உன்னை அன்புடன் அழைக்கின்றார்.**

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியத்தின் மூலம் வெளியிடப்படும் வாலிப ஜெபக்குழுக்களுக்கான மாத இதழ்.

**VISION**

**To reach all the spheres of India and to imbibe the heavenly manna to Our youth, who are the future pillars of Our Nation**

எல்லைகள் கடந்து நம் எதிர்கால இந்தியத் தூண்களாகிய இளைஞர்கள் உள்ளத்தில் பரலோக மன்னாவை விதைக்க, சிந்தனை கூர் கொண்டு இந்தியாவை மீட்டிடும் இலக்கியச் சேவையால் இளைஞனைத் தேற்ற ஓர் இறை படைப்பு.

**OBJECTIVE**

**A monthly magazine to strengthen the prayer cells.... Produced, Layout & Design by FMPB Youth & Teens Wing**

www.fmpbyouth.org
kerithmagazine@fmpb.org
29, High school Road, Ambattur,
Chennai - 600 053.
PH: 044-26570404 EXTN 266

**தனிப்பிரதி ரூ. 25/-**

**ஆண்டு சந்தா ரூ. 250/-**

ஜெபக்குழுவில் நீங்கள் அமர்ந்து தியானிப்பதற்காகவும், ஜெபிப்பதற்காகவும் கேரீத் இதழில் செய்திகளையும், ஜெபக்குறிப்புகளையும் நடுப்பக்கத்தில் கொடுத்துள்ளோம். ஜெபக்குழுத் தலைவர்கள் அவற்றை தனியாக எடுத்து ஜெப நேரத்தில் பயன்படுத்தலாம். இப்புத்தகத்தின் ஏனையப் பகுதிகளை உங்கள் ஜெபக்குழுவுக்கு வரும் வாலிபர்களுக்குக் கொடுத்து படிக்கச் சொல்லலாம். ஏராளமான புதிய தகவல்களுடன் உங்களை மாதம் ஒருமுறை சந்திப்போம். பயன்படுத்துங்கள்... ஜெபக்குழுவை வலுப்படுத்துங்கள்...

தொடர் ஜெபத்திற்கு **அறைகூவல்** பயன்படுத்தவும்

## INDEX

| | |
|---|---|
| Fellowship Lunch | - 5&7 |
| கேட்ட கேள்விக்கு நச்சுன்னு ஒரு பதில் | - 8 |
| மிஷனெரி பணியில் நம் கால மனிதர் | - 11 |
| KYC புதுப்பிப்பு மோசடி | - 14 |
| தெரிஞ்சுக்கோ... புரிஞ்சுக்கோ... | - 20 |
| மீன் வாசல் | - 21 |

# வேத வசனத்தில் வளர்ந்திட வா...



**என் அன்பு இளம் உள்ளங்களுக்கு, கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!**

ஒரு தேனீ மேஜை கரண்டி அளவு தேன் தயாரிப்பதற்கு 4,200 தடவை மலர்களுக்கு சென்று வருகிறது. ஒரு நாள் ஏறத்தாழ 100 தடவை வெளியே சென்று வருகிறது. ஒவ்வொரு தடவையும் அது சுற்றும் நேரம் 20 நிமிடங்கள். தேனெடுக்கும் பூக்கள் 400. இந்த தகவலை நான் படித்த போது பரிசுத்த வேதாகமம் தேனுக்கும், தேன் கூட்டிற்கும் ஒப்பிடப்பட்டுள்ளது (சங். 19:10, 119:103). கிட்டத்தட்ட 1500 ஆண்டுகளாக வேதாகமம் எழுதப்பட்டுள்ளது. இரவோடு இரவாக எழுதி மறுநாள் காலையில் வெளியிடப்படும் செய்தித்தாளைப்போல பைபிள் உருவாக்கப்படவில்லை. தமது புத்தகத்தை கடவுள் அவசர அவசரமாய் எழுதவில்லை. ஆனால் இன்றைய நாட்களில் பைபிளைப் படிப்பதிலும், தியானிப்பதிலும் அதிக அவசரப்படுகின்றோம்.

வேதாகமத்தை திரும்பத் திரும்ப படிக்கும் போது, வசனங்களை ஒப்பிடுவது எளிதாகிறது. மேலும் இதைப் படிக்கும் போது இரண்டு பயன்கள் உண்டு. ஒன்று, மிகவும் கடினமான பகுதிகள் தெளிவாகிவிடும். இரண்டு, தவறான உபதேசங்களுக்கு நாம் தப்பித்துக் கொள்ளலாம். எனவே கடவுளுடைய வார்த்தையிலிருந்து கடவுள் விரும்பும் பலனை நாம் பெற வேண்டுமானால், நம் நேரத்தை வேதாகமம் வாசிக்க கட்டாயம் செலவிட வேண்டும். திராட்சைச் செடியின் கொடி படர்ந்திருப்பது போல வேத வசனத்தை பிடித்து ஜெயமாய் வாழ்வோம் என உங்களை வாழ்த்துகிறேன்.

ஜனவரி மாதம் பொங்கல் விடுமுறை நாட்களில் இறைவனின் தோட்டத்தில் (திருவள்ளூர்) நடைபெற்ற வாலிபர் முகாமில் 409 வாலிபர்கள், 73 இளம் வாலிபர்கள் மற்றும் தலைவர்கள், போதகர்கள் கலந்துக் கொண்டது மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது. அதே நாளில் சாயர்புரத்தில் நடைபெற்ற கிதியோனியர் முகாமில் 304 வாலிபர்கள் பங்கு பெற்று, தங்கள் வாழ்க்கையை ஆண்டவருக்கும், அவருடைய ஊழியத்திற்கும் அர்ப்பணித்தனர். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

இந்த மாதம் 8 மற்றும் 9-ம் தேதிகளில் நடைபெறவுள்ள நமது இயக்கத்தின் தேசிய திட்டக் கூடுகைக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். கேரீத் பத்திரிகை பலவிதங்களில் ஆசீர்வாதமாக இருப்பதை அறிந்து தேவனைத் துதிக்கிறேன். தொடர்ந்து வாலிபர் பிரிவு மற்றும் கேரீத் ஊழியங்களுக்காகவும், எங்களுக்காகவும் தயவாய் ஜெபியுங்கள். வேத வசனத்தில் வளருவோம். திருச்சபைக்கும், தேசத்திற்கும் ஆசீர்வாதமாய் வாழ்வோம்.

உங்கள் பகுதிகளில் / சபைகளில் வாலிபர் கூடுகைகள், முகாம், தலைமைத்துவ பயிற்சி, இளம் தம்பதியர் கூடுகை நடத்திட தயவாய் ஜெபித்து திட்டமிடுங்கள். எங்களை தொடர்பு கொண்டு இக்கூடுகையின் விவரங்களைத் தெரியப்படுத்தினால், உங்களுக்கு உதவ ஆயத்தமாக இருக்கிறோம். தேவனுக்கே மகிமையுண்டாவதாக!

கிறிஸ்துவின் பணியில்,
*ஜெ. டேனியல் அருள்மணி*

# கூடார ஊழியம் -ஆரோன்



Rev. Johnson Daniel

TORAH MISSION

1st WEEK MESSAGE

அகில உலகத்தையே ஆளத்துடித்த மகா அலெக்ஸாண்டரின் படையிலிருந்து தப்பி ஓடிய ஒரு வாலிபனை, அலெக்ஸாண்டரிடம் விசாரணைக்கு கொண்டுவந்தனர். அவனது பெயர் என்ன என்று கேட்ட அரசனிடம் தன் பெயர் அலெக்ஸாண்டர் என்றான் அவன். அதைக்கேட்டு அதிர்ச்சியடைந்த பேரரசன் சட்டென அவனிடம், ஒன்று உன் பெயரை மாற்று அல்லது உன் குணத்தை மாற்று என்றார் மிக அழுத்தமாக. எகிப்திலே லேவிக்கு பிறந்த மகளான யோகெபேத் என்பவளுக்கும், அம்ராமுக்கும் பிறந்த தலைமகன் தான் ஆரோன். ஆசாரிய ஊழியத்தின் ஆரம்பப்புள்ளியான இவனுடைய அழைப்பையும், ஆசாரிய ஊழியத்தின் மேன்மையையும் உங்களோடு பகிர்ந்து நம் வாழ்வை அதனோடு ஒப்பிட்டு இந்த கனமான ஆசாரிய பணிக்கென உங்களை அர்ப்பணிக்க அன்போடு அழைக்கிறேன்.

## 1. பிரத்தியேகமான ஊழியம்:

மேலும், ஆரோனைப்போல தேவனால் அழைக்கப்பட்டாலொழிய, ஒருவனும் இந்தக் கனமான ஊழியத்துக்குத் தானாய் ஏற்படுகிறதில்லை (எபி. 5:4) என்ற வசனத்தின்படி ஊழியத்தைக் குறித்துப் பேசும்போதெல்லாம் எவரும் குறிப்பிட மறப்பதேயில்லை. இந்த வசனத்தை மேற்கோள்காட்டி ஊழியத்திற்குத் தப்பித்துக்கொள்ளும் அநேக வாலிப தம்பி, தங்கையரை நான் அறிந்திருக்கிறேன். ஆனால் தேவன் ஆரோனை எவ்வாறு தெரிந்துகொண்டார், எந்த சூழ்நிலையில் அவன் அழைக்கப்பட்டான் என வேதத்தை கவனித்துப் பார்ப்போமானால், இஸ்ரவேலர் எகிப்தில் அடிமைகளாக்கப்பட்ட காலக்கட்டத்தில், தேசத்தில் ஒடுக்குமுறை உச்சத்தில் இருந்த சூழ்நிலையில் தான் தேவன் ஆரோனை அழைக்கிறார். தன் மக்களின் கூக்குரலைக் கேட்ட தேவன், வனாந்திரத்தில் ஆடுகளின் பின்னே அலைந்துகொண்டிருந்த மோசேயை அவியாத அக்கினி காட்சியின் மூலம் அழைத்து அனலூட்டி தன் மக்களை மீட்க அனுப்ப சித்தங்கொண்டார். ஆனால் தயங்கி, தவித்து அதனை தவிர்க்க முற்பட்ட அவனுக்கு உதவியாக ஆரோனை அனுப்புகிறார். இஸ்ரவேலருக்குப் பிறக்கும் எல்லா ஆண் குழந்தைகளும் கொல்லப்பட வேண்டும் என்ற எகிப்து அரசனின் கட்டளைக்கு முன்னாகப் பிறந்தவன் ஆரோன், மோசேயோ அந்த கட்டளையை மீறி பிறந்தவன். யாத். 4:14-ன் படி தேவ அழைப்பு அவர்களது நாற்பதாண்டு காலப் பிரிவிலிருந்து அவர்களை ஒன்றிணைத்தது. தேவ அழைப்பிற்கு சம்மதம் தெரிவித்து சமகால மோசேயைச் சந்திக்க தானாய்ப் புறப்பட்டு வந்தவன் இந்த ஆரோன். தேவபர்வதத்தில் இச்சகோதர்களின் இனிய சந்திப்பு நிகழ்வதை வேதம் நமக்கு யாத் 4:27ல் கற்றுக் கொடுக்கிறது. சூழ்நிலைகளைக் கண்டு பயந்து நின்ற மோசேயுடன் தோளோடு தோள் நின்று தேவப்பணி செய்ய தன்னை அர்பணித்த ஆரோனைப் போல இந்த உன்னத பணிக்கென உன்னை அர்ப்பணம் செய்வாயா? சூழ்நிலைகள் அல்ல, அதனை மாற்ற வல்லவர் நம் தேவன் என அறிந்து, அவருக்கு உன் வாழ்வை அர்ப்பணிப்பதன் மூலம் அதனை அறிக்கைச் செய்வாயா?

## 2. பிரதானமான ஊழியம்

துவக்கத்தில் மோசேக்குத் துணைச் செல்ல, மோசேயுடன் தூதுச் சொல்ல வந்த ஆரோன், தேவகட்டளை பெற்று தேவனுக்கென பிரத்தியேகப்படுத்தப்பட்டு, பயன்படுத்தப்பட்டான். லேவி. 8-ம் அதிகாரத்தில் ஆசாரியப் பணிக்கென ஆரோனும், அவனுடைய குமாரரும் இஸ்ரவேலின் சகல கோத்திரங்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டு, பிரத்தியேகப்படுத்தப்படுவதைக் காண முடியும். தேவன் அவர்களைப் பிரத்தியேகப்படுத்தினதின் பிரதான நோக்கமே அனுதினமும் ஆண்டவருடைய சந்நிதானத்தில் நின்று அவருக்குப் பணிவிடை செய்வதே. ஆசரிப்புக் கூடாரத்தின் மூன்று வாசல்களையும் கடந்து மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கும் பாக்கியம் பெற்றவன், அதாவது ஆண்டவரை காணும் மாபெரும் பேறு பெற்றதினாலேயே இந்த ஊழியம் சிறப்பு பெறுகிறது. மேலும் தன்னைத்தானே ஒவ்வொரு முறையும் பரிசுத்தப்படுத்திக்கொள்வதோடு, ஆண்டுதோறும் இஸ்ரவேல் மக்களையும் பரிசுத்தப்படுத்தும் (Atonement) பிரதானமான ஊழியத்தின் பொறுப்பைப் பெற்றிருந்தான் ஆரோன். நம் தேசத்தின் ஆவிக்குரிய சுத்திகரிப்புக்காக அவரது சந்நிதானத்தில் ஆவலாய் காத்திருந்து பணிச்செய்ய முன்வர ஆயத்தமா?

## 3. பிரதிநிதித்துவ ஊழியம்

ஆசாரிய ஊழியத்தின் தனிச்சிறப்பு தேவனுடைய பிரதிநிதியாக தேவாசீர்வாதத்தை மக்களுக்கு வழங்குவதும், தேவனிடத்தில் மக்களின் பிரதிநிதியாக வேண்டுதல் செய்வதுமே. அதாவது தேவனுக்கும், மனிதனுக்கும் நடுவாக மத்தியஸ்தம் செய்யும் ஒப்பற்ற பணியாகும். ஆரோனும் அவனுடைய சந்தியினரும் தேவனுடைய பிரதிநிதியாக ஊழியம் செய்ய ஆண்டவரால் நியமிக்கப்பட்டனர். அதனை நிறைவேற்றவும் செய்தனர். இம்முறைமை ஏற்படுத்தப்பட்டு ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வந்த நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் இவ்வூழியத்தின் நிறைவேறுதலாய் பரிபூரண பலியாக தன்னையே தந்தார். எபிரேய ஆக்கியோன், எபிரெயர் 5,6 மற்றும் 7ம் அதிகாரங்களில் ஆசாரிய முறைமையின் படி வந்த இயேசுகிறிஸ்துவே நமக்கு பிரதான ஆசாரியராய் ஒரேதரம் தம்மைத் தாமே பலியாக ஒப்புக்கொடுத்து நாமெல்லோரும் மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கும் பாக்கியத்தை ஏற்படுத்தினார் எனக் கூறுகிறார். மேலும் 1 பேதுரு 2:9-ன் படி நம்மையும் இராஜரீக ஆசாரியக் கூட்டமாய் ஏற்படுத்தியும் இருக்கிறார்.

எனவே நாமும் அவர் மூலமாய், அவருடைய சித்தத்தின் படி நம் ஜனத்தின் பிரதிநிதியாக அவர் சந்நிதியில் அனுதினமும் நிற்க அழைக்கிறார். ஆசாரிய ஊழியத்திற்கென ஆவியானவரால் ஏவப்படுகிறவர்கள் இவ்வூழியத்திற்கு முன்வருவது அவசியம். குறிப்பாக ஆசாரிய ஊழியத்திற்கு முன்குறிக்கப்பட்டவர்கள் தயக்கமின்றி, தாமதமின்றி அர்ப்பணிக்க ஆண்டவர் அழைக்கிறார். ஆவியானவரின் துண்டுதலோடு துணையோடு இந்த கனமான பணிச்செய்ய உன்னை அர்ப்பணிப்பாயா?

# இளசுகள் நாலும் இலை சாப்பாடும்

(நாலு இளைஞர்களின் பெயர்கள்: Dr. சத்தியன், Er. சாதுரியன், Pr. விஷயம் , Rev. ரகசியம்)

**சத்தியன்:** டேய் நம்ம Pr. விஷயம் ஏதோ ஒரு விஷயத்துக்காகவே இந்த மாதம் இந்த கடையை செலக்ட் பண்ணியிருக்கான் போல

**விஷயம்:** ஆமா (ரகசியம் குறிக்கிட்டு) இந்த Google Map-ல மன்மத கிராமம்-னு டைப் பண்ணினா உடனே "மயக்கம் உணவகம்" வந்துடுது எப்படிடா?

**விஷயம்:** அது ஒன்னும் இல்லை. இந்த கடற்கரைக் கிராமத்தில் இந்தக் கடை ஸ்பெஷல். இங்க மீன் மட்டுமே கிடைக்கும். வேற சிக்கன், மட்டன் கிடைக்காது. உண்மையிலேயே இங்க சுவை மயக்கம், வாசனை மயக்கமும் கன்பார்ம்.

**சாதுரியன்:** சாப்பிட்ட பிறகு மயங்காம இருந்தா சரி.

**ரகசியம்:** ஏற்கனவே இங்க நிறைய "மயக்க கேஸ்கள்" உட்கார்ந்திருக்காங்க.

**சத்தியன்:** அது உன் கண்ணுக்கு மட்டும் தான் தெரியுது. எப்படிடா இப்படிப்பட்ட கேஸ்களுக்கு கவுன்சிலிங் கொடுக்கிற பிறகு கொஞ்சம் வருஷம் கழிச்சி கல்யாணமும் பண்ணி வைக்க

**ரகசியம்:** (சிரிச்சுக்கிட்டே) அது ஊழிய இரகசியம் உனக்குப் புரியாது. (விஷயம் தொடர்ந்து... இந்த கடற்கரைக்கு காதல் ஜோடிகள் அதிகம் வருவாங்க) அவர்களுக்காகவே சீட்டிங் அமைப்பு இருக்கும். இப்போ நம்ம நாலு பேரு உட்காருகிற மாதிரி சீட்டை பாரு.

(நான்கு பேரும் Seat கிடைத்து உட்காருகிறார்கள்)

(Waiter: மீன் பெயர்களை அடுக்கிக் கொண்டே போகிறான். நாலு பேரும் மீன் பொரியல், மீன் குழம்பு, மீன் தொக்கு, மீன் புட்டு மற்றும் மீன் கட்லெட் என Order கொடுக்கிறார்கள்)

**சத்தியன்:** டேய் இங்க பைபிளில் சொன்னது போல 153 மீனும் கிடைக்கும் போல. ஆனா அது ஒரே வலையில் கிடைத்தது. இங்க ஒரே கடையில் கிடைக்குது.

(எல்லாரும் சிரிக்கிறார்கள்)

**ரகசியம்:** இந்த 153 நம்பரை Psycology "Narcissistic Number" அப்படின்னு சொல்லுவாங்க. (மூன்று பேரும் ஒரே குரலாக அப்படின்னா?) அதாவது இந்த நம்பரில் ஒவ்வொரு எண்ணையும் மூனு மடங்கால் பெருக்கி, அதைக் கூட்டினால் அதன் கூட்டுத்தொகை அதே எண் வரும் ($1^3+5^3+3^3 = 153$). நார்சிஸ்ட் என்ற நபர் தன்னையே அளவுக்கதிகமாக நேசித்து, அதனாலே செத்துப் போனான். எனவே நார்சிஸ்டிக் என்று பெயர் வந்தது. சைக்காலஜில அதிகம் சுயத்தால் பாதிக்கப்பட்ட குணநலன்களை (Narcissistic Personality Behave) சுயநலம் கொண்ட ஆளுமை என்று கூறுவர். இதில் அதிகம் பாதிக்கப்பட்டவர்களை NPD என்று சொல்லுவார்கள் அதாவது இதன் விளக்கம் Narcissistic Personality Disorder.

**சத்தியன்:** அப்படின்னா என்னடா கொஞ்சம் விளக்கமா சொல்லேன்.

**விஷயம்:** சுருக்கமாக சொன்னால், இவர்கள் வெற்றியாளர்கள், சக்தி மிக்கவர்கள் (Power), புத்திசாலிகள், தங்களைப் பற்றியக் கற்பனையில் அதிகம் மூழ்கியிருப்பார்கள், தங்கள் துணையைப் பற்றிய கற்பனையும் அதிகம் உண்டு. இவர்களைப் போன்றவர்களிடமே இவர்களால் நட்பு, காதல் கொள்ள முடியும். மேலும் இவர்கள் பெரியவர்களின் ஆலோசனையை அலட்சியமாக நினைப்பார்கள். காரணம் தங்களைக் குறித்த மித மிஞ்சிய எண்ணம். மொத்தத்தில் IIதீமோ. 3:2-8 என்ற வசனம் அவர்களுக்கு பொருந்தும்.
மூன்று பேரும் ஓ... ஓ... (டேய் முள்ள பார்த்து சாப்பிடுங்க)

**சத்தியன்:** அது சரி இந்த NPD கேஸுகளை எப்படி கண்டுபிடிப்ப.

**விஷயம்:** இவங்க தங்கள பாராட்டுறத ரொம்ப விரும்புவாங்க. தங்கள் பாராட்டுறவங்கள அவங்களுக்கு ரொம்ப பிடிக்கும். அவங்களையேச் சுற்றி சுற்றி வருவாங்க, நேசிப்பாங்க, தங்களை குறித்த அதிக சுய எண்ணத்தோடே இருப்பாங்க, இரக்கமிருக்காது (lack of eympathy), சீக்கிரம் திருப்தியடைய மாட்டார்கள். தங்களுக்கு தேவை என்றால் யாரையும் தங்கள் வலைக்குள் இழுத்துவிடுவார்கள். மொத்தத்தில் திமிர் பிடித்தவர்கள் போல் காணப்படுவார்கள்.

**சத்தியன்:** நீ சொல்றத பார்த்தா இந்த கடைக்குள்ள நிறைய அது மாதிரி (NPD) கண்ணுக்குத் தெரியுது. ஆமா பைபிள் கூட இதை பாவம்னு சொல்லுது (நீதி. 16:5, 21:4).

**சாதுரியன்:** நீ சொல்லுவது மிக மிக சரி. இப்போ இவங்க கூட்டம் கூடிக் கொண்டே போவதை கவனிச்சியா. அதுவும் பிப்ரவரி 14, மார்ச் 8 எல்லாம் பெரிய பண்டிகை மாதிரி மாறியிருக்கு. இதுக்கு காரணம் என்ன தெரியுமா? அதாவது இளசுகளையும், பெண்களையும் குறி வைத்துதான் அழகு சாதனப் பொருட்களைச் சந்தைப்படுத்துறாங்க. முன்னாடி ஒரு வீட்ல ஒரு பவுடர் டப்பாதான் இருக்கும். இப்ப Make-up Box என்கிற பெயரில 20 பவுடர் வகை, 7 lipstick வகை, Fridge-யை தொறந்தா 5 Nailpolish டப்பா இருக்கு. (நாலு பேரும் சிரிப்பு)

**விஷயம்:** உனக்கு தெரியுமா! நீ சொன்ன மாதிரி இந்த cosmetic products உற்பத்தியாளர்களும், இதைச் சந்தைப்படுத்துகிறவர்களும் தங்கள் வியாபாரத்தைப் பெருக்கத் திட்டமிட்ட வியாபார யுக்தியே இப்படிப்பட்ட நாட்களை முக்கியப்படுத்தியது. இந்த நாட்களை ஒட்டி அவர்களுடைய விளம்பரம் எங்கும் காணப்படும்.

**ரகசியம்:** அது சரி இப்பதான் புரியுது, எங்க Church-ல போன வாரம் ஒரு சில யூத் பசங்க வருகிற பிப்ரவரி மாதம் 16 ஞாயிற்றுகிழமையில் Youth Day-வாக Celebrate பண்ணனும்னு கேட்டாங்க.

**விஷயம்:** நீ அனுமதிக்காத இவங்க நாலு வருஷம் கழிச்சு இத Lovers Day-வா மாத்திடுவாங்க. (எல்லோரும் சிரிப்பு)

**ரகசியம்:** டேய் இந்த கோளாறு இப்ப நிறைய பேர் கிட்ட இருக்கிறது போல தெரிகிறது. இவங்களை எப்படிடா டீல் பண்ணுவ.

**சாதுரியன்:** கதை எங்கே போனாலும் இவன் காரியத்தில கரெக்டா இருக்கான்.

-இதன் தொடர்ச்சி 7-ம் பக்கம்



Mr. M. Jerome Stanley & Fly.

# வேதாகம ஊழியம் -ஏசாயா

“அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும்; அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச்செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்”. (ஏசாயா 55:11)

Rev. Daniel Gnanapragasam



தேவனுடைய வார்த்தையை தீர்க்கதரிசனங்களாகப் பெற்றுக்கொண்டு அதை ஸ்திரமாக போதித்து, இறைமக்களை எச்சரித்து ஆண்டவரின் கிருபையால் நீடிய பொறுமையைக் குறித்து விளம்பின ஏசாயாவின் வேதாகம ஊழியத்தை நாம் இக்கட்டுரையில் காண்போம்.

- ★ 66 புத்தகங்களைக் கொண்ட வேதாகமத்தின் சுருக்கமாக 66 அதிகாரங்களைக் கொண்ட ஏசாயா புத்தகம் நம்பப்படுகிறது.
- ★ ஒரு புதிய சுவிசேஷமாக 5-ம் சுவிசேஷம் கருதப்படுகிறது.
- ★ மனித வாழ்வின் முப்பரிமாணமாய் விளங்கும் படைப்பு, வீழ்ச்சி, மீட்பு என்ற வாழ்வியல் அனுபவங்களை 3 காலகட்ட நிகழ்வுகளாக தொகுத்து வழங்கியுள்ளார்.

8-ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆமோத்சின் மகன் இந்த ஏசாயா. ஆமோத்சும், யூதராஜாவாகிய உசியாவின் தகப்பனாகிய அமத்சியாவும் சகோதரர்களாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. ஆலயத்திலே அடிக்கப்பட்ட (குஷ்டரோகம்)உசியாவின்மரணம்ஏசாயாவின்வாழ்வில் இறைவனைக் குறித்த ஒரு தேடலை உண்டுபண்ணியது. தேவனுக்கு முன்பான உசியாவின் பெருமை அவன் வாழ்வில் ஒரு புரிந்துணர்வைக் கொடுத்தது. தயக்கத்தோடும், பயத்தோடும் ஆலயம் வந்தவனுக்கு ஆண்டவரின் வார்த்தை அருளப்படுகிறது. தேவதரிசனம் பெற்ற அவன் தன்னை “சுவிசேஷ தீர்க்கதரிசியாக” இதோ நான் இருக்கிறேன் என்று ஒப்படைக்கிறான். ஆயத்தமும், தகுதியும் இல்லாமல் ஆசாரியப்பணியைச் செய்ய துணிந்த உசியா வியாதிப்பட்டு மரணமடைந்தான். இந்த இழப்பின் மத்தியில் ஆண்டவரின் ஆலயம் சென்ற ஏசாயா தூய்மைப்படுத்தப்பட்டு, தகுதியாக்கப்பட்டு தூயவரின் ஊழியத்தைச் செய்ய துணிந்து முன்வந்தான்.

ஏசாயா புத்தகத்தை 3 பிரிவுகளாக அதன் காலகட்ட நிகழ்வுகளைக் கொண்டு பிரிக்கலாம்.

1. 1 - 39 அதிகாரங்கள் வரை (Proto Isaiah) - இதன் கால சூழல் Pre-exilic அதாவது யூதராஜ்ஜியம் பாபிலோனிய அடிமைத்தனத்திற்குச் செல்லும் முன் உள்ள எச்சரிப்பு வார்த்தைகள்.
2. 40 - 55 அதிகாரங்கள் வரை (Deutero Isaiah) - இதன் கால சூழல் In-exilic அதாவது தென்திசை யூதராஜ்ஜியம் பாபிலோனிய அடிமைத்தனத்தில் இருந்தபோது சொல்லப்பட்ட நம்பிக்கை மற்றும் ஆறுதலின் வார்த்தைகள்.
3. 56 - 66 அதிகாரங்கள் வரை (Trito Isaiah) - இதன் காலகட்டம் Post-exilic அதாவது இஸ்ரவேல் ஜனங்களின் 70 ஆண்டு கால பாபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டு மீண்டும் எருசலேமில் குடியமர்த்தப்பட்ட காலகட்டமாகும்.

இதனை ஏசாயா

A. இஸ்ரவேலின் மீறுதல் (Transgression of Israelite)
B. பாபிலோனின் ஒடுக்குதல் (Oppression of Babylon)
C. ஆண்டவரின் மீட்பு (Redemption of Yahwah)

இவ்வாறாக முழு வேதாகம செய்தியையும் அடையாளமாக உருவகப்படுத்தி எடுத்துரைக்கிறார் (A symbolic representation). 3 வெவ்வேறு காலகட்டங்களில் இஸ்ரவேலர்கள் அடிமைப்பட்டு பாபிலோனுக்குச் சென்றார்கள். அதுபோல் 3 காலகட்டமாக எருசலேமில் குடியமர்த்தப்பட்டு மீண்டும் தேவாலயம், பலிபீடம், அலங்கம் போன்றவை அதின் ஸ்தானத்தில் கட்டப்பட்டு கடவுளின் ஆளுகை உணரப்பட்டது.

## I. கடவுளின் குணாதிசயம்:

- ✦ தம் வல்லமையான செயலிலும், அன்பிலும் என்றும் மாறாதவர்
- ✦ பரிசுத்தமுள்ளவர் (ஏசாயா 6:1-4)
- ✦ ஞானமுடையவர்
- ✦ உக்கிர கோபம் கொண்டாலும் கருணை நிறைந்தவர்
- ✦ நீடிய பொறுமை, மிகுந்த தயவுள்ளவர்
- ✦ நித்திய உடன்படிக்கையை வாக்குறுதியாகக் கொடுத்து, அதை நிறைவேற்றும் ஆண்டவர் (ஏசாயா 55:3)

## II. ஏசாயாவின் குணாதிசயம்:

- ✦ உண்மையான தீர்க்கன் - உள்ளதை உள்ளதென்று வகைப்படுத்தியவன்
- ✦ தாழ்மையான சிந்தைக் கொண்டவன் - கடவுள் முன்பாகவும், ராஜாக்கள் முன்பாகவும், இறை மக்கள் முன்பாகவும் தன்னைத் தாழ்த்தினான்
- ✦ நீதியுள்ள மனிதன்
- ✦ மறைநெறி கோட்பாடுகளோடு வாழ்ந்தவன்
- ✦ பெயருக்கேற்றபடி ஆண்டவரே என் இரட்சிப்பு என்று வாழ்ந்தவன்

## III. தீர்க்கதரிசனங்களின் சிறப்புகள்:

- ✦ ஏசாயாவேதீர்க்கதரிசிகளில்முதன்மையானவரும், முதல் தீர்க்கதரிசியுமாவார்
- ✦ இம்மானுவேலராகநம்மோடுஎப்போதும்இருக்கும் எபெனேசராகிய மேசியா இயேசு கிறிஸ்துவின் வரவைக் குறித்தும், அவர் வருகையைக் குறித்தும் ஆயத்தப்படுத்த வந்த யோவான் ஸ்நானனைக் குறித்தும் உரைத்த தீர்க்கதரிசனம் சிறப்பானது.
- ✦ கிறிஸ்து இயேசுவை பாடுபடும் தாசனாக, உலகமனைத்து மனிதர்களின் பாவம் போக்கும் பரிகார பலியான ஆட்டுக்குட்டியாக சித்தரிப்பது சிறப்பு (ஏசாயா 41:8-16, 42:1-9, 44:1-5, 21-28, 49:1-13, 50:4-11, 52:13, 53:12).
- ✦ ஏசாயா தீர்க்கதரிசன புத்தகத்தின் பிரதான நோக்கம் என்னவென்றால் விழுந்துபோன மானிடத்திற்கு எச்சரிப்பின் வார்த்தையும், மீட்க வந்த கடவுளின் அன்பால் மீண்டும் நிறைவான நித்திய வாழ்வு உண்டு என்ற நம்பிக்கையின் செய்தியுமே ஆகும்.
- ✦ தீர்க்கன் ஏசாயா இயேசு கிறிஸ்துவின் வாழ்வு, மரணம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றை அடையாளப்படுத்தி தூர காலத்து தீர்க்க தரிசனத்தை எழுதியுள்ளார்.

பிரியமான வாலிப தம்பி, தங்கையே!

ஏசாயா தீர்க்கதரிசி அரச குடும்பத்தோடு நெருங்கிய தொடர்புடையவராக இருந்தாலும், ராஜாதி ராஜாவாகிய நம் ஆண்டவரின் கட்டளைக்கு அடிப்பணிந்து, கர்த்தருடைய வார்த்தையை சத்தியமாக அறிவித்து, தன் வாழ்வையே இரத்த சாட்சியாக மரிக்க ஒப்புக்கொடுத்தார். ஆண்டவருடைய வார்த்தைக்கு உன் வாழ்வை ஒப்புக் கொடுத்து அர்ப்பணிப்பாயா?



5-ம் பக்கத்தின் தொடர்ச்சி

**விஷயம்:** நான் NPD கேஸை Biblical Counselling மூலம் 3 நாள் Seminar-ல படித்தேன். நான் அதை Short-ஆ சொல்றேன். முதல்ல இவங்களை நாம பாராட்டணும். (எல்லாரும் சிரிப்பு) நேரடியா இவங்களைக் கண்டனம் பண்ணி புத்திச் சொல்லக்கூடாது.

**(சத்தியன்:** பிறகு இவங்க சபை பக்கமே தலைவைத்து படுக்க மாட்டான்) அவங்களைக் குறைச் சொல்லக்கூடாது. அதே நேரத்தில் அவர்களுடைய நடத்தையை ஏற்றுக் கொள்ளவும் கூடாது.

**ரகசியம்:** டேய் கொளப்பிறியே, என்னதான்டா செய்யணும்.

**விஷயம்:** 'பொறுமை'... 'பொறுமை'... அதாவது பொறுமையாக கையாளணும், அதாவது தீர்மானம் எடுக்க வற்புறுத்தாமல் அல்லது திணிக்காம அவங்களாகவே தீர்மானம் எடுக்கிற மாதிரி பேசணும்.

**சத்தியன்:** இதுக்கு முதல்ல எசே. 28: 11-19 இந்த பகுதியை வாசிக்க வைக்கணும். பின்பு யாக். 3:13-17 வரை வாசிக்க வைக்கலாம்.

**விஷயம்:** இதுக்கு தாண்டா நமக்கு சத்தியன் தேவை. Super டா

**ரகசியம்:** 'புரியுது'... 'புரியுது'... என்னைப்பார், என் அழகைப் பார், என் அறிவைப்பார் என்றும், நான்-என்-என்னுடைய-தான்-தன்னுடைய என்ற கொள்கையுடன் தினமும் மணிக்கணக்கில் தன்னையே அலங்கரித்து, தன்னையேப் பார்த்துக் கொண்டு, அளவுக்கதிகமாகச் சுயத்தைச் சார்ந்திருக்கிற இந்த இளசுகளை டீல் பண்ண நமக்கு தனி Skill-லே தேவைப் போல.

**சாதுரியன்:** Hello, Rev. Skill இல்ல, Gift வேணுமின்னு சொல்லு. (மற்றவர்கள் சிரிப்பு) டேய் அடுத்த மாசத்துக்கு நான் கடை செலக்ட் பண்ணிட்டேன். (மற்ற மூவரும் ஆச்சரியத்துடன் எங்கடா) அந்த கடை பேறு "மருமகா கை சமையல் உணவகம்" (மற்ற மூவரும் எங்கடா இருக்கு) ஜமீன் கிராமத்தில, அந்த கடையோட ஸ்பெஷல் அடுத்த மாதம் சொல்றேன். இப்ப இங்க Bill-ல செட்டில் பண்ணிட்டு கிளம்புவோம்.

(நாலு பேரும் பைக் ஸ்டாண்டிற்க்கு வருகின்றனர்)

**சாதுரியன்:** டேய் ஒரே ஒரு சந்தேகம் அப்ப Love பண்றது எல்லாருமே NPD கேஸ் தானா.

**விஷயம்:** நல்ல வேளைக் கேட்டக் காரியத்தையேக் கெடுக்கப் பார்த்த. காதல் என்பது ஒரு அருமையான உணர்வு. அது எல்லோருக்கும் வரும். ஒழுக்கம் உள்ளவர்கள் முதல்ல தான் அன்பை அந்த நபரிடமே சொல்ல மாட்டாங்க. புரியிர மாதிரி சொல்லனுமுன்னா Propose பண்ணிட்டு அலைய மாட்டாங்க. அந்த உணர்வை அடக்கமாக கையாண்டு தன் வாழ்க்கையிலே முன்னேறிக்கிட்டே இருப்பாங்க. தன்னுடைய வாழ்க்கை கிறிஸ்தவ சாட்சியைச் சார்ந்தது மற்றும் திருச்சபையைச் சார்ந்தது என்றும், மேலும் தங்களுடைய திருமண வாழ்க்கைக்கு பெற்றோர் மற்றும் உடன்பிறந்தோரின் ஆசை, சம்மதம், பொறுப்பு உண்டு என்ற கொள்கையுடையவர்கள். ஆனா... இந்த NPD கேஸுங்க தைரியமா ஊர் சுத்துவாங்க. என் முடிவு, என் வாழ்க்கை என ஊர் சுத்தும் இவங்க ஒரு நாள் இவங்கள புகழாதவங்களைக் கழட்டி விட்டுட்டு ஆளமாத்திறுவாங்க. அதனால தான் இப்படிப்பட்ட காதல் திருமணத்தில் முடிந்தாலும், இவர்களது திருமண வாழ்க்கையிலும் பிரச்சனைகள் வந்துட்டே தான் இருக்கும்.

**சாதுரியன்:** புரிஞ்சுதுடா

(நாலு பேரும் Bye, Bye... அடுத்த மாதம் சந்திப்போம்)

# நான் ஏன் ஆலயத்திற்கு செல்ல வேண்டும்?






Mrs. Jeba Saral

**Hello ! How are you? How is your heart?** உனக்கு உண்மையான சந்தோஷம் உண்டா? என்று யாராவது நம்மை கேட்டால் நமக்கு **heart-warming**-ஆ இருக்கும்-ல? ஆமாம் தம்பி, தங்கச்சி ஆதாமின் காலத்திலிருந்து எல்லா மனிதர்களும் ஒரே குடும்பத்தில் / சமுதாயத்தில் ஒன்றாய் இருக்க வேண்டும் என்னும் மனதை உடையவர்களாய் இருக்கிறார்கள். இந்த மாதத்தின் கேள்வி என்னவாக இருக்கும் என்று கொஞ்சம் யூகிக்க முடிகிறதா? **Yes**, சிலர் **Correct**-ஆ சொல்லிட்டீங்க ! "நான் ஏன் ஆலயத்திற்கு செல்ல வேண்டும்". பழைய ஏற்பாட்டில் ஓய்வு நாள், வாரத்தின் கடைசி நாளாக கருதப்பட்டு, அனுசரிக்கப்பட்டது. ஏனெனில் தேவன் தம் படைப்புகளைச் சிருஷ்டித்து, ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார். மாறாக புதிய ஏற்பாட்டில் இயேசு மரித்து, உயிர்த்த நாளாகிய வாரத்தின் முதல் நாள் ஓய்வு நாளாக ஆசரிக்கப்பட்டு வந்தது (ஆதி. 2:3, யோவான் 20:1). மேலும் அது வெற்றியின் நாளாக, புதிய ஆரம்பத்தின் நாளாகவும், உயிர்த்தெழுந்த இயேசுவை எல்லா சீஷர்களும் வாரத்தின் முதல் நாளில் கூடியிருந்தபோது தரிசித்ததால் அதன் அடையாளமாகவும், இது விசுவாசிகளோடு ஆராதனைச் செய்யும் நாளாகவும் மாறினது. இன்னமும் அது அப்படியே கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

எல்லாவற்றிலும் நம் **Role Model**-ஆக இருக்கும் இயேசுவும் எல்லா ஓய்வு நாளிலும் ஜெப ஆலயத்திற்கு சென்றிருக்கிறார் (மாற்கு 1:21). ஓய்வுநாளான போது, ஜெபஆலயத்தில் உபதேசம்பண்ணத் தொடங்கினார் (மாற்கு 6:2). தாவீது கூறுகிறார் "ஆயிரம் நாளைப்பார்க்கிலும் உமது பிராகாரங்களில் செல்லும் ஒரே நாள் நல்லது; ஆகாமியக் கூடாரங்களில் வாசமாயிருப்பதைப் பார்க்கிலும் என் தேவனுடைய ஆலயத்தின் வாசற்படியில் காத்திருப்பதையே தெரிந்துகொள்ளுவேன்" (சங். 84:10). "கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவோம் வாருங்கள் என்று எனக்கு அவர்கள் சொன்னபோது மகிழ்ச்சியாயிருந்தேன்" (சங்கீதம் 122:1). நம்மில் எத்தனை பேர் அந்த **Class** இந்த **Class** என்று போவது, சுற்றி பார்க்கச் செல்வது, **Rest** எடுப்பது என்று ஆலயத்திற்கு செல்லாமல் இருக்கிறோம். இதிலும் சில பேர் இன்னும் கொஞ்சம் அதிகமாக "நான் ஏன் வாரந்தோறும் ஆலயத்துக்கு செல்ல வேண்டும்? ஆலயத்திற்கு செல்வோரெல்லாம் நல்லவர்களா என்ன? எனக்கு எந்த கஷ்டமும் இல்லை, ஆலயத்திற்கு செல்ல" என்று பல சாக்குப்போக்கு சொல்கின்றனர்.

தம்பி, தங்கையே !! நீ ஆலயத்துக்கு செல்வதால், நீ தேவனில் இன்னும் பலப்படுகிறாய் ! அவர் வார்த்தைகள் அங்கு உன்னை உயிர்ப்பிக்கிறது. உன் பாவங்களைச் சுட்டிக் காட்டுகிறது. நீயும் மற்ற எல்லா விசுவாசிகளும் ஒன்றுசேர்ந்து, தேவனை ஆராதித்து, ஒருவரையொருவர் உற்சாகப்படுத்தி, ஒன்றாய் அவருடைய 2-ம் வருகைக்கு ஆயத்தப்படுகிறோம் (எபி.10:24, 25). நீங்கள் யாருக்காகவும் சபைக்குச் செல்ல வேண்டாம். யாருக்காகவும் சபைக்குப் போகாமலிருக்கவும் வேண்டாம். "கிறிஸ்துவே சபைக்கு தலையாயிருக்கிறார் என்று எபே. 5:23-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆதலால் கிறிஸ்துவுக்காக சபைக்குச் சென்று, அவருடைய உடன் உறுப்புகளாய் சபையில் செயல்பட்டு, தேவனை ஆராதித்து மகிமைப்படுத்துங்கள். இப்படி செய்வதால் உன்னிமித்தம் தேவன் மகிழ்ந்திருப்பார். தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகளை கர்த்தர் உனக்கும் தந்தருளுவார். ஆமென் !



# ஹரியானா மாநிலம்

**அன்று...**

பழங்காலத்தில் “பிரம்மவர்தா”, “ஆரிய வர்தா” மற்றும் “பிரமொப் தேசா” என்று அழைக்கப்பட்ட பிராந்தியம் தற்போது ஹரியானா என்று அழைக்கப்படுகிறது. ‘ஹரி’ (Hari) இந்து கடவுள் விஷ்ணு, ‘ஆயனா’ (AYANA) வீடு, கடவுளின் வசிப்பிடம் (The adobe of God) என்றும் ஹரியானா பொருள்படும்.

**சமுதாய நிலை:** ஹரியானா “இந்தியாவின் டென்மார்க்” என்று அழைக்கப்பட்டது. விஞ்ஞான தொழில்நுட்பக் கருவிகளை உற்பத்தி செய்வதில் இம்மாநிலம் முதலிடத்தில் உள்ளதோடு, கோடீஸ்வரர்களும் இங்கு அதிகம் இருக்கின்றனர். விவசாயமே முக்கியத் தொழிலாக இருப்பதால் செழுமை கொண்ட மாநிலமாக இது விளங்குகிறது.

**கலாச்சாரம்:** ஹரியானா மக்கள் கலாச்சார மரபுகளைக் கண்டிப்பாகக் கடைபிடிக்கின்றனர். ஆண்கள் வேட்டியுடன் குர்தாவும், பெண்கள் லெஹங்காவுடன் குர்தாவும் அணிகின்றனர்.

**மத நம்பிக்கை:** மூதாதையர்களையும், அத்திமரம் மற்றும் துளசி செடிகளையும் புனிதமாகக் கருதி வழிபடுவது இவர்கள் மத நம்பிக்கை. ஓட்ராஜ்புத் சமுதாயம் இன்றும் விலங்குகளைப் பலியிட்டு வணங்குகின்றனர். குருக்களின் உபதேசங்களைப் பின்பற்றுகின்றனர். குருஷேத்ரா இந்துக்களின் புண்ணியஸ்தலமாகக் கருதப்படுகிறது.

FMPB-ல் முதல் பணித்தளம் ஹரியானாவில் உள்ள சிர்சாவில் 1974-ம் ஆண்டு நமது முன்னோடி ஊழியர்களான திரு. ஜேம்ஸ் கெய்சர் மற்றும் திரு. அந்தோணி அவர்களால் துவங்கப்பட்டது. 1977-ம் ஆண்டு ஏப்ரலில் நமது ஊழியர் திரு. ராஜேந்திரன் அவர்கள் சிர்சாவிற்கு அனுப்பப்பட்டார்கள். 1978-ம் ஆண்டு மார்ச் மாதம் இரண்டு பேர் ஆண்டவரை முதல்முறையாக ஏற்றுக் கொண்டனர். 1980-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 3 பேர் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்தனர். 1979-ம் ஆண்டு ஃபத்தேபாத் பகுதியில் ஒரு ஆராதனைக் குழு உருவானது. திரு. எல். மாசிலாமணி, மறைந்த திரு. டி. ஜே. தாமஸ் அவர்கள் இணைந்து இங்கு பணி செய்தனர். அநேக எதிர்ப்புகளின் மத்தியில் 1983-ம் ஆண்டு ஃபத்தேபாத்தில் புதிய பணித்தளம் திறக்கப்பட்டு திரு. ஜாய் குட்டி குடும்பம் அங்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். 1984-ல் திரு. பால் ஆனந்தன் குடும்பமும், 1986-ல் திரு. ஐ. கே. ஆபிரகாம் குடும்பமும் இணைந்து ஊழியம் செய்தனர்.

**இன்று...**

7 பணித்தளங்களில் 17 ஊழியர்கள் சுவிசேஷம் அறிவித்து வருகின்றனர். 23 மக்களினங்கள் மத்தியில் ஊழியம் நடைபெறுகிறது. 19,218 பேர் மறுமலர்ச்சி பெற்று கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர்.

**ஜெபக்குறிப்புகள்:**

- குடி, புகையிலை மற்றும் போதைப் பழக்கங்களுக்கு அடிமைப்பட்டுள்ள மக்கள் அவைகளிலிருந்து விடுப்பட
- பாலிய திருமணம், விவாகரத்து, பெண் சிசுக்கொலை, சமுதாய சீர்கேடுகள் முற்றிலும் ஒழிக்கப்பட
- இம்மாநிலத்திலுள்ள 7,356 கிராமங்களிலும் சுவிசேஷம் அறிவிக்கப்பட, திரள் கூட்ட மக்கள் அவர் மந்தையில் இணைய
- எழுத்து வடிவமற்ற ஹரியான்வி மொழியில் முழு வேதாகமம் விரைவில் மொழிபெயர்க்கப்பட
- மொழிபெயர்ப்புப் பணியிலுள்ள அருட்திரு. சுதர்சன் மற்றும் திருமதி. லிடியா சுதர்சன் இவர்களுக்கு தேவன் நல்ல சுகத்தைக் கொடுக்க
- NSM (நவஜீவன் சேவா மண்டல்) மூலம் நடத்தப்படும் பகல் நேரக் காப்பகத்தில் பயின்று வரும் நமது விசுவாசிகளின் குழந்தைகள் 150 பேரும் கல்வியில் சிறந்து விளங்க, ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சி பெற
- மதமாற்ற தடைச்சட்டம் அமலிலுள்ள சூழலில் மத சுதந்திரம் காக்கப்பட ஜெபிப்போம்.

**2024 - 2025 இலக்குகள்:**

- புதிய கிராமங்கள் - 304 சந்திக்கப்பட
- இரவு நேர கூட்டங்கள் - 617
- இயேசு திரைப்பட ஊழியங்கள் - 369
- சத்சங் சுவிசேஷ கூட்டங்கள் - 1012
- சத்சங் சுவிசேஷ சபைகள் - 28
- கட்டப்பட வேண்டிய ஆலயங்கள் - 11

இந்த இலக்குகளை நிறைவேற்றி முடிக்க ஜெபிப்போம்.



FIELD - FMPB

Mrs. Vasanthi Emmanuel

Ms. Beulah Baskar



# பேரரசுகளின் கல்லறை

## GRAVEYARD OF EMPIRES

ஆப்கானிஸ்தான் மத்திய மற்றும் தெற்காசியாவின் மத்தியில் அமைந்துள்ளது. இது வர்த்தக வழிகள் மற்றும் செல்வாக்கைத் தேடும் பேரரசுகளுக்கு ஒரு கவர்ச்சியான பரிசாக அமைகிறது. இருப்பினும், இது பெரும்பாலும் போட்டியிடும் சக்திகளுக்கு ஒரு போர்க்களமாக இருந்து வருகிறது. பல பேரரசுகளை தடுமாற செய்த பெருமை இதை சேரும். ஆப்கானிஸ்தான் இதனாலேயே தான் "பேரரசுகளின் கல்லறை" என்று அழைக்கப்படுகிறது. ஏனெனில் வெளிநாட்டு சக்திகள் அதை கைப்பற்றுவதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் அது ஒரு கடினமான தேசமாக காணப்பட்டது. பல சக்திவாய்ந்த பேரரசுகளும் ஆப்கானிஸ்தானில் ஆதிக்கம் செலுத்த முயன்று பல சவால்களை எதிர்கொண்டனர். பெரும்பாலும் பெரும் இழப்புகளை சந்தித்ததாகவோ அல்லது முற்றிலும் தோல்வியடைந்ததாகவோ தான் வரலாறு கூறுகிறது.

### புவியியல் அமைப்பு:

ஆப்கானிஸ்தான் கரடுமுரடான, மலைப்பாங்கான நிலப்பரப்புகளையும், இயற்கையான கோட்டைகளையும் கொண்டுள்ளதால் உள்ளூர் போராளிகள் கூட உட்புகக் கடினமாக அமைந்துள்ளது. கைபர் கணவாய் போன்ற குறுகலான பாதைகள் வரலாற்றில் தங்களை ஆக்கிரமிக்க வந்த படைகளுக்கு எதிராக திறம்பட செயல்பட்டு தங்களைப் பாதுகாத்துக் கொண்டது.

### நெகிழ வைக்கும் மக்கள்:

ஆப்கானிஸ்தானில் பஷ்டூன்கள், தாஜிக்குகள் மற்றும் ஹசராக்கள் போன்ற பல்வேறு இனக்குழுக்கள் அடங்கிய கடுமையான, சுதந்திரமான மக்கள் இங்குள்ளனர். அவர்களின் பழங்குடி அமைப்பு மற்றும் ஆழ்ந்த சுயாட்சி உணர்வு அந்நிய ஆட்சியின் கீழ் ஒன்றிணைவதை கிட்டத்தட்ட சாத்தியமற்றதாக்குகிறது.

### வரலாற்று நிகழ்வுகள்:

- **THE GREAT அலெக்சாண்டர் (கி.மு. 4-ம் நூற்றாண்டு):** இப்பகுதியை அலெக்சாண்டர் கைப்பற்றிய போதிலும், அவர் கடுமையான எதிர்ப்பை எதிர்கொண்டார். அதை முழுமையாக அடக்கி ஆள மகா அலெக்சாண்டராலேயே முடியவில்லை.
- **முகலாயப் பேரரசு:** தொடர்ச்சியான கிளர்ச்சிகளை இங்கு எதிர்கொண்டது. ஆனாலும் ஆப்கானிஸ்தானின் மீது நீடித்த கட்டுப்பாட்டை வைத்திருக்க முடியவில்லை.
- **BRITISH பேரரசு (19-20 ஆம் நூற்றாண்டு):** 1842-ல் காபூலில் மூன்று ஆங்கிலோ-ஆப்கான் போர்களை நடத்தி அதில் பெரிய தோல்விகளுடன் பேரழிவோடு பின்வாங்கியது.
- **SOVIET UNION (1979-1989):** அவர்களின் படையெடுப்பு ஒரு தசாப்த கால யுத்தமாக இருந்தது. நடத்தப்பட்ட இப்போரில் பெரும் உயிரிழப்புகளுடன் அமெரிக்க ஆதரவில் ஆப்கானிஸ்தான், முஜாஹிதீன்களின் அழுத்தத்தின் கீழ் அவர்களை வெளியேற்றியது.
- **UNITED STATES மற்றும் NATO (2001-2021):** இராணுவ இருப்பு மற்றும் முதலீடுகளோடு இரண்டு தசாப்தங்களாக இங்கு இருந்தபோதிலும், தலிபானின் மீள் எழுச்சி வெளிநாட்டு துருப்புக்கள் வெளியேறிய பின்னர் ஆப்கானிய அரசாங்கத்தின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தது.

### ஜெபக்குறிப்புகள்:

- UNESCO மற்றும் UNISEF போன்ற நிறுவனங்களின் 2024-க்கான அறிக்கையின் படி பொதுவாக பெண்களுக்கு கல்வி என்பது கனவாகவே இருக்கிறது என்றும், 12 வயதுக்கு மேற்பட்ட சிறுமிகளுக்கு இடைநிலை மற்றும் உயர்கல்வி கண்டிப்பாக தடைசெய்யப்பட்ட உலகின் ஒரே ஒரு நாடு ஆப்கானிஸ்தான் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலை மாறி அனைவருக்கும் சமமாக கல்வி கிடைக்க ஜெபிப்போம்.
- இந்நாட்டில் கிறிஸ்தவத்தில் ஆர்வம் காட்டும் மக்கள் மீது "தாய் மதம் திரும்பும்" அழுத்தம் கொடுக்கப்படுவதால் அவர்கள் அனைவரும் ரகசியமாகவே கூடி ஆராதிக்க முடிகிறது. எனவே இங்கு சுவிசேஷத்திற்கு வாசல்கள் திறக்கப்படவும், சபைகள் சுதந்திரமாக செயல்படும் அளவிற்கு இத்தேசத்தின் ஆளும் சக்திகளை தேவன் ஆளுகை செய்யவும் ஜெபிப்போம்.
- இத்தேசம் போர்களின் காரணமாக அதிக அளவில் பயங்கரவாதம், வறுமை மற்றும் குழந்தைகளின் ஊட்டச்சத்து குறைபாடு ஆகியவற்றைக் எதிர்க்கொண்டுள்ளது. HUMAN DEVELOPMENT INDEX எனப்படும் ஒரு அளவிடும் குறியீட்டில் 182வது இடத்தில் உள்ள ஆப்கானிஸ்தான் உலகின் மிகக் குறைந்த வளர்ச்சியடைந்த நாடுகளில் ஒன்றாக உள்ளது. எனவே பொருளாதார ரீதியாக தேவன் இத்தேசத்தை ஆசீர்வதிக்கவும், இங்கு வறுமை ஒழியவும் ஜெபிப்போம்.

# மிஷனெரி பணியில் நம் கால மனிதர்

அருட்திரு. ஆல்பர்ட் சாமுவேல்



பணித்தள மிஷனெரிகளைக் கொண்டு தேவன் செய்த அற்புதங்களுக்காக, அதிசயங்களுக்காக தேவனைத் துதிப்போம். அநேக வருடங்கள் பணித்தளத்தில் பணி செய்து, இப்போது தமிழ் நாட்டில் முன்னேற்றப்பணியில் இணைந்து பணி செய்யும் அருட்திரு. ஆல்பர்ட் சாமுவேல் அவர்கள் தன்னுடைய அனுபவங்களைக் குறித்து இந்த இதழில் பகிர்ந்துக் கொள்கிறார்கள்.

### அர்ப்பணிப்பு:

நான் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்திருந்தாலும், கிறிஸ்துவை அறியாதவனாக வாழ்ந்து கொண்டிருந்தேன். இரட்சிப்பின் அனுபவம் இல்லாதவனாக சிறு பிள்ளைகள் மத்தியிலும், பாடகர் குழுவிலும் இணைந்து பெயருக்காக ஊழியம் செய்து கொண்டிருந்தேன். எனது வாழ்க்கையில் சமாதானமில்லாமல் இருந்தேன். ஒரு நாள் ஊழியர் ஒருவர் என்னைப் பார்த்து கர்த்தர் உன்னை ஊழியம் செய்ய அழைக்கிறார், உன் மாய்மாலமான வாழ்க்கையை விட்டுவிட்டு, அவருடைய பிள்ளையாக மாறி, அவருடைய ஊழியத்தைச் செய்ய ஆயத்தப்படு. ஒரு மீனை பிடிப்பது போல உன்னை தேவன் பிடிக்க விரும்புகிறார். வலையில் சிக்கிய மீன் சேதம் இல்லாமல் காணப்படும். ஆனால் தூண்டிலில் சிக்கிய மீன் இரத்த காயங்களுடன் தான் வெளி வரும். இதில் நீ எதில் வர விரும்புகிறாய் என்று என்னை எச்சரித்தார். அன்றிலிருந்து தேவனைத் தேட ஆரம்பித்தேன். ஜெபம் என் வாழ்வில் வந்தது. புதிய மனிதனாக மாறி தேவனுடைய ஊழியத்திற்கு என்னை அர்ப்பணித்தேன்.

### பணித்தளத்தின் அனுபவங்கள்:

1988-ம் ஆண்டு நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் பணிகளிலே என்னை இணைத்துக் கொண்டேன். 1990-ம் வருடம் ஏற்கனவே மிஷனெரியாக பணியாற்றி வந்த ஹெப்சிபாவை என்னுடன் திருமணபந்தத்தில் தேவன் இணைத்தார். நான்கு வருடங்கள் காலேப் ஜீப் குழு மூலமாக ஊழியம் செய்வதற்கும், 5 வருடங்கள் மால்டோ, சந்தால் மலைகளிலே 46 ஆலயங்களை கட்டுவதற்கும், ஒரு வருடம் கிராமத்தில் தங்கியிருந்து சுதேச ஊழியர்களுக்கும், சபை மூப்பர்களுக்கும் வேதாகமம் மற்றும் ஊழியப்பயிற்சி கொடுக்கவும் தேவன் உதவி செய்தார். 2000-ம் ஆண்டு தொழிற்பயிற்சி மையம் துவங்கி அநேக வாலிபர்களை சொந்தக் காலில் நிற்க வைக்கவும், ஆவிக்குரிய பாதையில் நடத்தவும் தேவன் உதவி செய்தார். 2009-ம் ஆண்டு சமுதாய கல்லூரியை ஆரம்பிக்கவும், அநேக வாலிப ஆண், பெண்களுக்கு தொழிற்பயிற்சி கொடுக்கவும் அதில் பணி செய்யவும் தேவன் உதவி செய்தார்.

### முன்னேற்றப்பணியின் அனுபவங்கள்:

தற்சமயம் நான் திண்டுக்கல்லில் முன்னேற்றப் பணியைச் செய்து வருகிறேன். இதில் நான் இணைந்த பொழுது எந்தவித முன் அனுபவம் இல்லாதவனாக தான் இருந்தேன், ஆனால் ஆண்டவரை மாத்திரம் சார்ந்திருந்தேன். அவரின் உதவியோடு முன்னேற்றப் பணியை துவங்கிய போது பல சவால்களையும், எதிர்ப்புகளையும், போராட்டங்களையும் சந்தித்தேன். இவைகளின் மத்தியிலும் "என் கிருபை உனக்கு போதும்" என்று சொன்ன தேவன் என்னோடிருந்து சகலத்தையும் நன்மையாக முடித்துக்கொடுத்தார்.

### முன்னேற்றப்பணியின் ஆசீர்வாதங்கள்:

நான் முன்னேற்றப்பணியில் இணைந்து, ஜெபத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கவும், அநேக ஆவிக்குரிய கூட்டங்களை நடத்தவும், குடும்பக் கூடுகைகள், பெண்கள் கூடுகைகள், வாலிபர் கூடுகை என்று பல கூடுகைகளை நடத்த தேவன் உதவி செய்தார். ஆரம்பத்தில் அனுபவம் இல்லாத எனக்கு அநேக காரியங்களின் மூலமாக அனுபவங்களைத் தேவன் கற்றுக் கொடுத்தார். விசேஷமாக என் மனைவியின் மூலமாக பெண்கள் மத்தியில் பல ஜெபக்குழுக்களை ஆரம்பிக்க உதவினார். சில இடங்களில் புதிதாக ஜெபக்குழு தலைவர்களை ஏற்படுத்தவும் தேவன் செய்தார்.

### பணித்தளமும், முன்னேற்றப்பணியும்:

பணித்தளத்திலும், முன்னேற்றப்பணியிலும் இருந்த எனக்கு தேவன் கற்றுக் கொடுத்தது, பணித்தளமில்லாமல் முன்னேற்றப்பணி இல்லை. முன்னேற்றப்பணியில்லாமல் பணித்தளமில்லை. இரண்டையும் சமமாகத் தான் கருத வேண்டும். எப்படி பணித்தள ஊழியங்களுக்காக ஜெபத்தில் பாரப்படுகிறோமோ, அதைப் போன்று முன்னேற்றப்பணிக்காகவும் பாரத்தோடு ஜெபிக்க வேண்டும்.

### வாலிபர்கள் மத்தியில் ஊழியம்:

வாலிபர்கள் மத்தியிலும் ஜெப குழுக்களை ஆரம்பித்தோம். ஆனால் வாலிபர்கள் அநேகர் இதில் கலந்துக் கொள்ள விருப்பம் இல்லாதவர்களாய் காணப்படுகின்றார்கள். ஆகவே தொடர்ந்து முயற்சித்து வருகிறோம். வாலிபர்களை கிறிஸ்துவுக்குள் கொண்டுவருவதும், திருச்சபைகளில் FMPB-ன் பணிகளைக் குறித்து பகிர்ந்து கொள்வதும், மிஷனெரி பாரத்தைத் திருச்சபைகளில் கொடுப்பதும், வாலிபர்களை மிஷனரிகளாக அனுப்புவதும் மிக கடினமான சவாலாக உள்ளது.

வாலிப பிள்ளைகளே, இது தேவை நிறைந்த தேசம். தேவனுடைய அழைப்புப் பெற்ற நாம் அதை அசட்டைச் செய்யாமல், அவருடைய சத்தத்திற்கு கீழ்ப்படிய வேண்டும். இல்லாவிட்டால் தேவன் நம்மை விட்டு விட்டு வேறு ஒருவரை வைத்து தமது சித்தத்தை நிறைவேற்றி விடுவார். நாம் தான் தேவனுடைய ஆசீர்வாதத்தை இழந்து நிற்போம். எனவே ஒளியாய் எழும்பி பிரகாசியுங்கள். ஜெபிப்போம்! ஜெயம் பெறுவோம்!

உங்கள் ஜெபம் வேண்டி...

- ♥ அண்ணன் சென்ற அனைத்து இடங்களிலுமுள்ள மக்கள் இரட்சிக்கப்பட
- ♥ இரட்சிக்கப்பட்ட மக்கள் பின்மாற்றமடையாமல், ஆவிக்குரிய வாழ்வில் இன்னும் பலப்பட
- ♥ அண்ணனுக்காக மற்றும் அவர்களது குடும்பத்தினருக்காக ஜெபிப்போம்.

**"FORWARD EVER, BACKWARD NEVER"**

# அமிலத்தாக்குதலுக்கு உள்ளானவர்கள்

## ACID ATTACK VICTIMS

Dr. Godwin Issac & Dr. Azubha Jenilet



அமிலத்தாக்குதல், ஒருவரை பயமுறுத்தும் அல்லது கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் நடத்தப்படுகிறது. பெரும்பாலும் பெண்கள் மீது இந்த தாக்குதல் நடத்தப்பட்டாலும், ஆண்களும் இதற்கு விதிவிலக்கல்ல. அமிலத்தாக்குதல் என்பது வேண்டுமென்றே இன்னொருவர்மேல், அமிலம் அல்லது அதற்கு நிகரான பாதிப்பை உண்டாக்க கூடிய பொருளை, அவருக்கு உடல் சேதமோ அல்லது உயிர் சேதமோ ஏற்படுத்தும் நோக்கத்தோடு வீசுவதாகும். பொதுவாக சல்பூரிக் அமிலம், நைட்ரிக் அமிலம் அல்லது ஹைட்ரோகுளோரிக் அமிலம் போன்றவை அமிலத்தாக்குதலுக்கு பயன்படுத்தப்படுகிறது. அமிலத்தாக்குதலுக்குள்ளானவர்கள் உடலளவில் மட்டுமல்லாது, மனதளவிலும், சமூகமளவிலும் மிகுந்த பாதிப்புக்குள்ளாகின்றனர்.

### அமிலத்தாக்குதலால் பாதிக்கப்பட்டவர் எதிர்கொள்ளும் சில முக்கிய சவால்கள்:

1. **உடல் தழும்புகள்:** இவர்கள் பெரும்பாலும் தீவிரத் தீக்காயங்களால் பாதிக்கப்படுகிறார்கள் (தோல் முதல் தசை எலும்பு வரை பாதிக்கப்படலாம்). உடல் வடிவமாற்றம், முக வடிவமாற்றம், தழும்புகள், உடல் பாகம் இழப்பு மற்றும் பார்வை இழப்பு.
2. **மனதின் காயங்கள்:** அமிலத்தாக்குதலுக்குள்ளானவர்கள் மனசோர்வு, மனஅழுத்தம் மற்றும் சமூக விலக்கத்துக்கு உள்ளாகிறார்கள்.
3. **சமூகப் போராட்டங்கள்:** அமிலத்தாக்குதலுக்குள்ளானவர்களின் வெளிபுறத்தோற்றத்தின் காரணமாக அவர்களுக்கு பல வாய்ப்புகள் மறுக்கப்படுகின்றன.
4. **மருத்துவ செலவுகள்:** பாதிக்கப்பட்டவர்களுக்கு அறுவை சிகிச்சை மற்றும் மறுவாழ்வு மருத்துவத்திற்கு ஆகும் செலவைக் குடும்ப நிதி நிலைமையின் காரணமாக செய்யமுடிவதில்லை.

### அமிலத்தாக்குதலுக்கான முக்கிய காரணங்கள்:

- **காதல் நிராகரிப்பு:** அமிலத்தாக்குதல் ஒரு பெண் ஆணின் காதலை நிராகரிக்கும் போதும், திருமண ஆசையை கூறும் ஆணை பெண் நிராகரிக்கும் போதும் இந்த அமிலத்தாக்குதல் நடக்கிறது.
- **குடும்ப தகராறு:** கணவன் மனைவி இடையே நடக்கும் குடும்பத்தகராறும் சில நேரங்களில் அமிலத்தாக்குதலுக்கு காரணமாகிவிடுகிறது.
- **வரதட்சணைக் கொடுமை:** சில சந்தர்ப்பங்களில் அமில தாக்குதல்கள் வரதட்சணைக் கொடுமை அல்லது ஒரு பெண்ணின் குடும்பத்திலிருந்து கொடுக்கப்பட்ட வரதட்சனை மீதான அதிருப்தி ஆகியவற்றால் நடக்கிறது.
- **பெண் வெறுப்பு** (பெண்களை ஆண்களை விட தாழ்ந்தவர்களாக நினைப்பது) மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறை: பெண்களின் பாலியல், உடை, தொழில் மற்றும் இனப்பெருக்க உரிமைகள் உட்பட பெண்களின் தனிப்பட்ட விருப்பங்களை கட்டுப்படுத்தும் போதும், சமூக எதிர்ப்பார்ப்புகளுக்கு பெண்களை இணங்க வைக்கும் முயற்சிகளை வலியுறுத்தும்போதும், பெரும்பாலும் பெண்ணின் வெறுப்பு வெளிப்படுகிறது. பெரும்பாலும் பாலின அடிப்படையில் பெண்களைக் கட்டுப்படுத்தவும், அச்சுறுத்தவும், அமைதிப்படுத்துவதற்கும் அமிலத்தாக்குதல் நடத்தப்படுகிறது.

### புள்ளி விவரங்கள்:

அமிலத்தாக்குதலைக் கட்டுப்படுத்துவதற்கான அநேக முயற்சிகள் எடுக்கப்பட்டாலும், உலக அளவில் அமிலத்தாக்குதல் சம்பவங்கள் அதிகம் நடக்கும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று. தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் (NCRB) அறிக்கையின்படி, இந்தியாவில் ஆண்டுக்கு 300க்கும் மேற்பட்ட அமிலத்தாக்குதல்கள் பதிவாகின்றன. இது எண்ணிக்கையில் அதிகம்தான். இருப்பினும், சட்டப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு இல்லாததாலும், பல சம்பவங்கள் பதிவாகாமல் இருப்பதாலும், அமிலத்தாக்குதல்களின் உண்மையான எண்ணிக்கை அதிகமாக இருக்கலாம். இந்தியாவில், அமிலத்தாக்குதலுக்கு ஆளானவர்களில் 80% பேர் பெண்கள். பெரும்பாலான தாக்குதல்கள் ஆண்களால் செய்யப்படுகின்றன.

### ஜெபக்குறிப்புகள்:

- அமிலத்தாக்குதலில் உயிர் பிழைத்த அனைவரும் பூரண உடல் நலம் பெற, இவர்களுக்கு தேவன் உடல் வலிமை மற்றும் மன தைரியத்தை அருளவும்
- அமிலத்தாக்குதலுக்கு உள்ளானவர்களுக்கு தேவன் மன அமைதியை கொடுக்கவும், அவர்களின் மன அழுத்தத்தை நீக்கவும், அவர்கள் நம்பிக்கையுடனும், தைரியத்துடனும், அன்புடனும் தங்கள் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்பவும்
- அமிலத்தாக்குதலுக்கு உள்ளானவர்களுக்குத் தேவையான மருத்துவ பராமரிப்பு, நிதி உதவி மற்றும் உளவியல் ஆலோசனைகள் கிடைக்க
- இவர்களுக்கு அன்பையும், ஊக்கத்தையும் வழங்கும் குடும்பங்கள் ஆசீர்வதிக்கப்பட
- அமிலத்தாக்குதலுக்கு அடிப்படைக் காரணமான பெண் வெறுப்பு, பொறாமை போன்றவைகள் வேரோடு பிடுங்கப்பட
- அமிலத்தாக்குதலுக்கு எதிரான சட்டங்கள் கடுமையாக அமல்படுத்தப்படுவதை அரசு உறுதி செய்ய, குற்றவாளிகளுக்கான தண்டனைகளை அதிகரிக்க, விசாரணை நடைமுறைகளை மேம்படுத்த
- பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவம், உளவியல் ஆலோசனைகள் மற்றும் நிதியுதவி வழங்கும் விரிவான மறுவாழ்வுத் திட்டங்கள் அரசாங்கத்தால் வழங்கப்படவும் ஜெபிப்போம்.

# சஹரியா மக்கள்

- சஹரியா என்றால் புலிகளின் நண்பர்கள் என்று பொருள். ஆனால் சிலரோ வனாந்தரத்திற்கான அரபு வார்த்தை மருவி சஹரியாவாக மாறினதாகக் கூறுகிறார்கள். சகரியா மக்கள் குறிப்பாக பாதிக்கப்படக்கூடிய பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் மத்திய பிரதேசம் ராஜஸ்தான் சட்டீஸ்கர் மற்றும் உத்திரப் பிரதேசத்தில் வாழ்கின்றனர். மத்தியப் பிரதேசத்தில் 3.5 லட்சம் பேர் வாழ்கின்றனர்.
- சஹரியா மக்கள் வாழும் பகுதி "சஹரேனா" என்று அழைக்கபடுகிறது. சரித்திரத்திற்கு முந்தைய காலத்திற்கான கற்களைக் கொண்டு கட்டப்பட்டதும், கல் கூரைகளால் செய்யப்பட்டதுமான வீடுகளில் வாழ்கின்றனர். இவர்கள் ஹிந்தி மற்றும் பிரிட்ஜ்பாஷா மொழிகளின் கலவையான "ஹரோடி" என்ற மொழி பேசுகின்றனர். இவர்கள் மத்தியில் கல்வி அறிவு வெறும் 3–4% மட்டுமே.
- ஆவியை வணங்கும் இவர்கள் தற்போது இந்து தேவதைகளையும் வழிபடுகிறார்கள். வீர் தேஜா தக்கர் பாபா, துர்கா, அனுமான், லால்பாய், பிஜாசன் போன்ற கடவுள்களை வழிபடுகின்றனர். சவ்னி அமாவாசை, ஜென்மாஷ்டமி, ரக்ஷா பந்தன், தீபாவளி, ஹோலி போன்ற பண்டிகளையும் கொண்டாடுகிறார்கள்.
- சஹரியா மக்கள் அடிப்படையில் வனப் பொருள்களை சேகரித்து பிழைப்பு நடத்துகிறார்கள். கருங்காலி மரத்திலிருந்து பிரித்து எடுக்கப்படும் காசிக்கட்டி பிசினை தயாரிக்கும் தொழிலை அறிந்தவர்கள். சமீப காலங்களில் கூடை பின்னுதல், கல் உடைத்தல், விவசாய கூலி போன்ற வேலைகளையும் செய்து வருகின்றனர். போதுமான மழை இல்லாததாலும், வெறும் 2% நிலம் மட்டுமே பாசன வசதி பெறுவதாலும் பரம ஏழைகளாக வாழ்கின்றனர். சமீப நாட்களில் நில ஜமீன்தார்களிடம் கடன் வாங்கி கொத்தடிமைகளாக உள்ளனர். இதனால் பெண்கள் நில ஜமீன்தார்களின் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாவதும் இங்கு அதிகம். 2019-ல் 26 வயது விஜய் சஹரியா என்ற சகோதரர் வாங்கிய 5000 ரூபாய் கடனுக்காக அவரிடம் வேலை செய்யாமல் இருந்ததால் உயிரோடு கொளுத்தப்பட்டார். "சஹரியா ஸ்வாங்" என்ற இவர்களது நடனம் மிகவும் பிரசித்தி பெற்றது.
- இவர்கள் வருமானத்தின் பெரும் பகுதியை குடி மற்றும் போதை பொருள்களுக்கு செலவிடுகின்றனர். அதனால் பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள் இங்கு அதிகம். 15% குழந்தைகள் மிக அதிகமான ஊட்டச்சத்துக் குறைவால் மரணத்திற்கு பக்கத்தில் உள்ளனர். சஹரியா மக்கள் மத்தியில் TB வியாதி தேசிய சராசரியை விட பத்து மடங்கு அதிகம். அதாவது குவாலியர் மாவட்டத்தில் மட்டும் ஒரு லட்சம் பேரில் 3,294 பேர் TB வியாதியால் பாதிக்கப்பட்டுள்ளனர். கல் குவாரிகளில் இம் மக்கள் வேலை செய்வதால் "சிலிக்கோசிஸ்" என்ற தூசியின் மூலம் ஏற்படும் நுரையீரல் வியாதியால் மரணமடைகின்றனர். 92% பெண்கள் விதவைகளாக வாழும் ஷிவ்புரி மாவட்டத்தின் மஜேரா கிராமம் இந்தியாவின் விதவை கிராமம் என அழைக்கப்படுகிறது.

மரண இருளின் பள்ளத்தாக்கில் வாழும் இந்த சஹரியா மக்களுக்கு விடுதலையின் நற்செய்தியைக் கூறுவது யார்?

## ஜெபியுங்கள்:

- ✦ இம்மக்களுக்குக் காற்றோட்டமுள்ள நல்ல தரமான வீடு கிடைக்க
- ✦ குடி போதை பொருள் பழக்கத்திலிருந்து விடுபட
- ✦ குழந்தைகளுக்கும், கர்ப்பிணி தாய்மார்களுக்கும் சத்தான ஆகாரம் கிடைக்க
- ✦ TB வியாதி இவர்கள் மத்தியிலிருந்து விலக
- ✦ கொத்தடிமை முறை மாறி சுதந்திரமாக வாழ
- ✦ தூசி மூலம் தோன்றும் சிலிக்கோசிஸ் என்ற நுரையீரல் வியாதி மாற
- ✦ நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு மூலம் இங்கு ஊழியம் மறுபடியும் துவங்கப்பட ஜெபிப்போம்.


சகாரியா பழங்குடியினரின் வீடு


சகாரியா பழங்குடி தம்பதியர்

- குறிப்பாக பாதிக்கப்பட்ட பழங்குடியின மக்கள் (Particularly Vulnerable Tribal Groups): இந்திய துணைக் கண்டத்தில் சுமார் 745 வகையான பழங்குடி மக்கள் (ST) வாழ்கின்றனர். இவர்களின் சமூக பொருளாதார வளர்ச்சியை ஆய்வு செய்த மத்திய அரசு 1973-ம் ஆண்டு மிகவும் பின்தங்கிய சில பழங்குடி மக்களை பழமையான மக்கள் (Primitive Tribes) என அழைத்தனர். பின் 2006-ம் ஆண்டு சுமார் 75 பழங்குடி மக்களை பாதிக்கப்படக்கூடிய மக்கள் என அழைத்தனர்.
- தேர்வு செய்ய காரணம்: மிக பழமையான விவசாய முறை, கல்வி அறிவு மிக குறைவு, மக்கள் தொகை குறைந்து கொண்டு வருதல், இந்த வகையைச் சேர்ந்த பழங்குடி மக்கள் 50 லட்சம் பேர் இந்தியாவில் உண்டு. 2025-ம் ஆண்டு முழுவதும் இந்த மக்களுக்காய் விசேஷமாக ஜெபிக்க உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

Ms. Lily Reaiah Grace

வளைக்குள் சிக்காதே

# KYC புதுப்பிப்பு மோசடி (KYC UPDATE SCAM)

"கவனம், Sim Card செயலிழப்பு மின்சார துண்டிப்பு KYC புதுப்பிப்பு அல்லது உறவினர்கள் உடல்நிலை சரியில்லாமல் இருப்பதாக அல்லது கைதுசெய்யப்பட்டதாக கூறுவது தொடர்பாக தெரியாத எண்களிலிருந்து அழைப்புகள் வந்தால் அவசரப்பட்டு செயல்படவேண்டாம். இந்த அழைப்பாளர்கள் Cyber கிரிமினல்களாக இருக்கலாம். இதுபோன்ற சம்பவங்களை உடனடியாக தேசிய Cyber helpline 1930-ல் தெரிவிக்கவும். பொது நலன் கருதி உள்துறை அமைச்சகத்தால் வெளியிடப்பட்டது".

இந்த வார்த்தைகள் கடந்த சில நாட்களாக நீங்கள் ஒருவரை செல்போனில் அழைக்க முயற்சிக்கும் போதெல்லாம் உங்கள் காதுகளில் தொடர்ந்து ஒலித்து உங்களை சலிப்படையவும், இதற்கான அவசியம் என்ன என கோபிக்கவும் செய்திருக்கலாம். மக்களை மிரட்டி பணம் பறிப்பதற்காக புதிய மோசடிகள் மூலம் நிதி மோசடி சம்பவங்கள் அதிகரித்து வருவதால் சைபர் கிரைம் விழிப்புணர்வு காலர் டியூனை ஒரு நாளைக்கு 8-10 முறை டெலிபோன் சந்தாதாரர்களுக்கு மூன்று மாதங்களுக்கு இயக்க வேண்டும் என்று தொலைத்தொடர்பு துறை (Department of Telecommunication) ஆபரேட்டர்களுக்கு உத்தரவிட்டுள்ளது.

இந்த விழிப்புணர்வு காலர் டியூனில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு முக்கிய மோசடியான KYC மோசடி என்றால் என்ன என்று அறிந்து ஜெபிக்கவிருக்கிறோம்.

## KYC மோசடிகள்:

உங்கள் வாடிக்கையாளரை அறிந்துக் கொள்ளுங்கள் (KYC-Know Your Customer) என்பது பல்வேறு வணிகங்கள், புதிய வாடிக்கையாளர்கள் சேரும் போது மற்றும் ஏற்கனவே இருக்கும் வாடிக்கையாளர்களின் விவரங்களை குறிப்பிட்ட கால இடைவெளியில் சரிபார்க்க / புதுப்பிக்க நடைபெறும் அடையாள சரிபார்ப்பு செயல்முறையாகும். KYC செயல்முறையை முடிக்க வாடிக்கையாளர்களின் சட்டப் பெயர், அடையாளச் சான்று (Aadhar, Pan Card), அடையாளச் சான்றிதழின்படி சரியான நிரந்தர முகவரி, நிறுவனம் அல்லது நபரின் சட்ட நிலை போன்ற விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

KYC செயல்முறை நிதி நிறுவனங்கள் மற்றும் வணிகங்கள் வாடிக்கையாளரை நன்கு புரிந்துகொள்ள RBI விதிமுறைகளின்படி, KYC கட்டாயத் தேவையாகிவிட்டது. இதன் முக்கிய நோக்கம் அடையாள திருட்டு, பயங்கரவாத நிதி, பணமோசடி மற்றும் நிதி மோசடி ஆகியவற்றைத் தடுப்பதாகும். இந்த விதியைச் சாதகமாக பயன்படுத்தி, மோசடி செய்பவர்கள், வாடிக்கையாளர்களின் தனிப்பட்ட விவரங்களை சேகரிக்க, வங்கி பிரதிநிதி போல் நடித்து, போலி SMS / குறுஞ்செய்தியை அனுப்புகின்றனர் அல்லது மோசடி அழைப்புகளை மேற்கொள்கின்றனர். மோசடி செய்பவர்கள் வாடிக்கையாளர்களுக்கு ஃபிஷிங் லிங்க் (Phishing link) அல்லது 10 இலக்க மொபைல் எண்ணை வழங்குவதன் மூலம் அல்லது digital சாதனத்தை (Mobile Phone / Computer) கையாள அனுமதி அளிக்க நம்ப வைக்கலாம், இதன் மூலம் வாடிக்கையாளரின் தனிப்பட்ட விவரங்களைத் தவறாகப் பயன்படுத்தி, அவர்களின் வங்கிக் கணக்குகளுக்கு அங்கீகாரமற்ற அனுமதி பெற்று, பணத்தைத் திருட விரும்புகிறார்கள். சமீப காலமாக பலர் உழைத்து சம்பாதித்த, சேர்த்துவைத்திருந்த, மருத்துவச் செலவிற்கு திரட்டி வைத்திருந்த பணத்தை இந்த மோசடியால் இழந்துள்ளனர், இது இன்னும் தொடர்கின்றது.

## அதில் சில கீழ்வருமாறு:

புனேயைச் சேர்ந்த 57 வயதான மூத்த DRDO தொழில்நுட்ப அதிகாரி ஒருவர் KYC மோசடி செய்பவர்கள் ஒரு வங்கியைப் போல ஆள்மாறாட்டம் செய்து, அவசர KYC புதுப்பிப்பைத் தெரிவிக்க வாட்ஸ்அப் செய்தியை அனுப்பியதில், அதை நம்பியதால் தனது வங்கிக் கணக்கில் இருந்து ரூ.13 லட்சத்தை இழந்துள்ளார்.

தமிழ் நாட்டைச் சேர்ந்த வியாபாரி ஒருவர் தன் மகனின் மருத்துவ சிகிச்சைக்காக பணம் எடுக்கவேண்டிய நேரத்தில் KYC அப்டேட் செய்யவில்லை என்றால் வங்கி கணக்கு முடக்கப்பட்டு விடும் என்று வந்த செய்தியை நம்பி மோசடியாளர்கள் சொன்ன KYC QS என்ற செயலியை பதிவிறக்கியதால் கடன் பெற்றுச் சேர்த்த நான்கு லட்சத்தை இழந்துள்ளார்.

## ஜெபக்குறிப்புகள்:

* மொபைல் வழியாக KYC விவரங்களை அப்டேட் செய்யச் சொல்லி எந்த வங்கியும் கேட்பதில்லை என்ற விழிப்புணர்வை மக்கள் பெற
* குறிவைக்கப்படும் மக்கள், விழிப்புடனும், தெளிந்த புத்தியுடனும் செயல்பட
* பாதிக்கப்படுவோர் விரைவாக எந்த தயக்கமும், வெட்கமுமின்றி செயல்பட்டு புகார் அளிக்க, இழந்த பணத்தை எல்லாம் திரும்ப பெற்றுக் கொள்ள
* மற்றவர்களின் உழைப்பை திருடத் தூண்டும் இச்சையின் ஆவியின் ஆதிக்கம் விலக
* இக்குற்றங்களில் ஈடுபடுவோர் கண்டுபிடிக்கப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட, மனம் திரும்பி இரட்சிக்கப்பட
* காவல்துறை, சைபர் குற்றப்பிரிவு அதிகாரிகள், ஞானத்துடன் விரைந்து வழக்குகளைக் கையாள
* பொய்யான சிம் கார்டுகள், இணையத்தளங்கள் (websites), செயலிகள் (Apps) கண்டறியப்பட்டு முடக்கப்பட ஜெபிப்போம்.





# தென் பிராந்திய சர்ச் கவுன்சில் – தேன்கனிக்கோட்டை

## (நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் அங்கம்)

Rev. Ruban Ramalingam

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு என்கிற நமது இயக்கமானது தனது முதல் பணித்தளத்தை 1967-ம் ஆண்டு ஜுன் மாதம் 9-ம்தேதியன்றுதர்மபுரிமாவட்டமாகஇருந்துதற்போதைய கிருஷ்ணகிரி மாவட்டமாகவுள்ள பெரியமலையில் தனது நற்செய்திப் பணியை ஆரம்பித்தது. நமது இயக்கத்தின் முன்னோடி மிஷனெரிகள் தியாகமான வாழ்வு மற்றும் நற்செய்திப் பணியின் மீது அவர்கள் கொண்டிருந்த தீராத தாகத்தின் காரணமாக இப்பகுதியில் உண்டான பலவிதமான எதிர்ப்புகளையும், இன்னல்களையும் தாண்டி சுவிசேஷ விதைகளை விதைத்தனர்.

ஆரம்பம் அற்பமானது தான், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை இம்மண்ணில் விதைப்பதற்கு நமது இயக்கத்தின் தலைவர்கள், மிஷனெரிகள் மற்றும் அங்கத்தினர்கள் செய்த தியாகமும் அர்ப்பணமும் அளவிடமுடியாதது. இவ்விதம் துவங்கிய இப்புனித பணியானது, ஒரே இடத்தில் தேங்கி கிடக்காமல் பெட்டமுகிளாலம் யெகோவாயீரேவில் துவங்கி, தற்போது தேன்கனிக்கோட்டை,தர்மபுரிமற்றும்திருவண்ணாமலை ஆகிய மூன்று பிராந்தியங்களாக பரந்து, விரிந்து தமிழ்நாடு மண்டலமாக உருவெடுத்துள்ளது. அன்று ஆரம்பித்த சுவிசேஷ தாக்கமானது இப்பகுதியில் கர்நாடக மற்றும் ஆந்திரா மாநில எல்லைகளிலும் நற்செய்திப் பணியின் வாசம் வீசுவது சர்வ வல்ல தேவனுக்கு மகிமையை சேர்க்கிறது.

பலவிதமான மக்கள் இனங்களுக்கு மத்தியில் உருவாக்கப்பட்டுள்ள இப்பகுதி திருச்சபைகளானது சமுதாய கட்டுப்பாடுகள், மதகட்டுப்பாடு, ஆதிக்க ஜாதியினரின் அத்து மீறல்கள் மற்றும் அரசாங்கத்தினால் காற்றாட்டு வெள்ளம் போன்று உருவாகும் அநேகவிதமான இடர்பாடுகளையும் தாண்டி தேவப் பணியானது நடைப்பெற்று வருவது தேவக் கிருபையே. தமிழ்நாடு மண்டலத்திலுள்ள நமது திருச்சபைகள் தன்னிறைவு பெற வேண்டும் என்கிற அக்கறையோடு இயக்கம் முன்னெடுக்கின்ற முயற்சிகளிலே தேவ கரம் வல்லமையாக வெளிப்படுவதற்காக சர்வ வல்லமையுள்ள தேவனைத் துதிக்கிறோம். "ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும், எண்ணிமுடியாத அதிசயங்களையும் அவர் செய்கிறார்" (யோபு 5:9) என்ற வசனத்தின்படி அவரே இவ்வூழியங்களை முன்னின்று நடத்தி வருகிறார். 2024 பெரியமலை தினம் கூடுகைக்காகவும் அதைத் தொடர்ந்து மூன்று நாட்கள் நடைப்பெற்ற வாலிபர் முகாமிற்காகவும், இம்முகாமிலே இப்பகுதி இளைஞர்கள் தேவனின் உன்னதப் பணிக்கு தங்களை ஒப்புக்கொடுத்ததற்காகவும் சர்வ வல்ல தேவனைத் துதிப்பதுடன், இப்பகுதியிலுள்ள திருச்சபைகள் தன்னிறைவை நோக்கி நடைப்போடுகின்றன என்பதற்கான சான்றுகளாகவும் திகழ்கின்றன. அனைத்து சவால்களையும் தாண்டி இப்பகுதி திருச்சபைகள் முழுமையாய் தன்னிறைவு பெற்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு அவருடைய வருகைப் பரியந்தம் மணிமகுடங்களாய் திகழ தொடர்ந்து ஜெபியுங்கள்.

### FMPB - 2030 உன்னத தொலைநோக்கு திட்ட லட்சியம் - தமிழ் மண்டலம்

| | |
|---|---|
| இயேசுவின் சீடர்கள் | - 4,400 |
| ஆராதனைக் குழுக்கள் | - 88 |
| திருச்சபைகள் | - 44 |
| ஊழியர்கள் | - 44 |
| மக்கள் | - 4,40,000 |
| கிராமங்கள் | - 880 |

### FMPB - முக்கியக் கரிசனைகள்

1. தரிசனத்தை எப்போதும் பகிர்ந்து கொண்டிருக்க வேண்டும்
2. ஒவ்வொரு வீடும் வேதாகம ஜெப குழுக்களாய் மாற வேண்டும்
3. இளைஞர் இயக்கமாய் வளர்ந்து கொண்டேயிருக்க வேண்டும்
4. மிஷனெரிகளை, ஊழியர்களை, தொழில் அதிபர்களை உருவாக்கிக் கொண்டிருக்க வேண்டும்.

# VIRAL NEWS

## ஜெபிக்கலாம் வா...








கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் மனந்திரும்ப ஜெபிப்போம்




பெண்களுக்கு எதிரான குற்ற செயல்கள் குறைய ஜெபிப்போம்.













விபத்துகள் நடக்காதிருக்க, பயணங்களில் தேவ பாதுகாப்பு இருக்க ஜெபிப்போம்.




சிறுபிள்ளைகள், முதியோர், கர்ப்பிணிப் பெண்கள் நோய் பாதிப்பிலிருந்து பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.




கொள்ளை நோயினால் மரணங்கள் நேராதிருக்க, அதில் பாதிக்கப்பட்டோர் சுகம் பெற ஜெபிப்போம்.



காட்டுத் தீயினால் வீடுகளை, தங்களுக்கு பிரியமானவர்களை இழந்து தவிப்போருக்காக ஜெபிப்போம். இந்த நிலைமை சீரமைக்கப்பட, தேவ இரக்கத்திற்காக ஜெபிப்போம்.

GUKESH DOMMARAJU WINS THE CHESS WORLD CHAMPIONSHIPAT THE AGE OF 18

வாலிபர்கள், இளம் வாலிபர்கள் தங்கள் திறமைகள் மற்றும் தாலந்துகளை வளர்த்துக்கொள்ள, தேவையற்ற உலக சிற்றின்பங்களில் அடிமைப்படாதிருக்க ஜெபிப்போம்.



# போதனை ஊழியம்

இயேசு சென்ற இடமெல்லாம் கூட்ட நெரிசல், மக்கள் அவரை பார்ப்பதற்கும், அவர் பேசுவதைக் கேட்பதற்கும், அவரைத் தொடுவதற்கும் என ஏதாவது ஒரு எண்ணத்தோடும், தேடுதலோடும் அவரைச் சுற்றி பெரும் திரளாக கூடியிருந்தார்கள். தான் சொன்னபடியே மக்கள் தனக்கு வேலைச் செய்ய வேண்டுமென்று அவர் ஒருபோதும் நினைத்ததில்லை. தம்மை முழுவதும் நமக்காகவே கொடுத்தார் (ஏசாயா 53:3). நம்முடைய மேசியாவாகிய இயேசுவைப் பார்க்க வந்த அத்தனை பேரும் வெறுமையாகத் திரும்பியதில்லை. அவர்களுடைய ஆன்மாவும், உடலும் புத்துணர்வு அடைந்தது.

ஏசாயா தீர்க்கன் இரண்டாம் அத்தியாயம் மூன்றாம் வசனத்தில் ஒரு முக்கிய நிகழ்வைத் தீர்க்கதரிசனமாக முன் அறிவிக்கிறான் (ஏசாயா 2:3). வேத புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கும் அனைத்து கர்த்தருடைய தீர்க்கதரிசிகளும், மோசேயின் முதல் ஐந்து ஆகமங்களைப் படித்து தான் தீர்க்கதரிசனம் சொன்னார்கள். அந்த தீர்க்கதரிசிகளின் காலத்தில் அவர்களுக்குப் பின் நிறைவேறப்போகிற நிகழ்வுகளை உவமைகளாகவும், தீர்க்கதரிசன காட்சிகளாகவும் அவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்டது. நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போல ஒரு பக்கம் நிழலோட்டமாக சொல்லப்பட்ட நிகழ்வும், மறுபக்கம் அறிவிக்கப்பட்ட நிகழ்வின் நிறைவேறுதல் எனத் தீர்க்கதரிசனங்கள் நிறைவேறிக் கொண்டிருக்கிறது. எடுத்துக்காட்டாக சீனாய் மலையடியில் இஸ்ரவேல் மக்கள் கர்த்தரிடமிருந்து பெற்றுக் கொண்ட பிரதான கட்டளைகளும், நியாயப்பிரமாணங்களும், அதின் முழு வெளிப்பாடாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மலையில் மக்களுக்கு சொல்லிய உபதேசங்களும் முன் அறிவிக்கப்பட்டதின் நிறைவேறுதலாகும்.

மத்தேயு 5-ம் அத்தியாயத்தை இயேசு கிறிஸ்துவின் போதனைகள்என்றுசொல்வதில்சிக்கலிருக்கிறது. போதிப்பதற்கு அவர் முழுவதும் மனிதனல்ல. மனிதன் தான் ஏதோ ஒன்றை கற்றோ, பயின்றோ, உணர்ந்தோ மற்றவர்களுக்கு போதிப்பான். கர்த்தராகிய இயேசுவோ மனிதவுருவெடுத்த தெய்வம், இதை அவரே நமக்கு தெளிவுப்படுத்துகிறார் (யோவான் 10:30). மனித முகரூபத்தில் அவர் இந்த உலகிற்கு வந்திருந்தாலும், விளங்கிக் கொள்ளமுடியாத பரம்பொருளின் முழு தன்மையில் அவரிருந்தார். கர்த்தராகிய இயேசு கூறியவைகளெல்லாம் அதாவது போதனைகளைத் தெய்வத்துவத்தின் வெளிப்பாடுகள் என்று சொல்ல வேண்டும்.

மனிதரின் போதனைகளை நீங்கள் கடைப்பிடிக்கலாம் அல்லது கடைபிடிக்காமலும் போகலாம். அதனால் நேரடியாக நமக்கு எந்த பாதிப்புமில்லை. ஆனால் வெளிப்பாடுகள் கடவுள் மனிதனுக்கு இவ்வுலகத்தில் வாழ்வதற்காக கொடுக்கும் விதிமுறைகள். இந்த விதிமுறைகளை நாம் அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இப்பொழுது மத்தேயு 5-ம் அத்தியாயத்திற்கு வருவோம். இதனை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம். மத். 5:1-20 இவை மனிதனுக்கும் கடவுளுக்குமான உறவும், அதனால் மனிதனுக்கு ஏற்படும் விளைவுகளைப் பற்றியதுமாகும். கூடுதலாக இவை அப்படியே யாத். 20-ல் கொடுக்கப்பட்டிருக்கும் முதல் ஐந்து கட்டளைகளின் விளக்கமாகவேயிருக்கிறது. தொடர்ந்து மத். 5:21-48 வரையுள்ளவைகள் மனிதன் தன் வாழ்வின் சூழலில் எப்படியிருக்க வேண்டும் என்பதற்கான விதிமுறைகள். இவையும் பிரதான கட்டளைகளில் பின்வரும் ஐந்தின் விளக்கமாகவே அமைந்திருக்கிறது.

இயேசுவின் போதனைகள் தெய்வத்தின் வெளிப்பாடாக இருந்தாலும் நாம் புரிந்துக் கொள்ளும் விதமாக கீழே சுருக்கமாக **'இயேசுவின் போதனை ஊழியங்கள்'** என்று எடுத்து தருகிறோம். இப்போது இயேசுவின் போதனை ஊழியத்தின் சுருக்கத்தைப் பார்ப்போம். இயேசுவின் ஊழியத்தில் முதலாம் ஆண்டில் ஒரு பிரசங்கமும், இரண்டாம் ஆண்டில் 5ம், மூன்றாமாண்டில் 4ம், கடைசி 6 மாதத்தில் 2ம், கடைசி வாரத்தில் மட்டும் 4 பிரசங்களும் பண்ணுகிறார். பிரசங்கங்கள் எல்லாம் கடற்கரை, படகில் அமர்ந்து, மலைகளில் (2 நீண்ட பிரசங்கம்) மேலும் சீஷர்களைப் பாதுகாக்க ஒரு பிரசங்கம், தன்னைப் பாதுகாக்க ஒரு பிரசங்கம் என தொடரும். இந்த போதனை ஊழியத்தின் சாராம்சம் 5 ஆகமங்களில் நிறைவாகவும், விளக்கிச் சொல்ல தீர்க்கதரிசன புத்தகங்களையும் பயன்படுத்தினார்.

போதனை ஊழியத்திற்கு காத்திருக்கவில்லை. சொந்த ஊரிலும், ஜெப ஆலயத்திலும், சமவெளிகளிலும் அவரின் போதனை ஊழியம் தொடர்கிறது. குறிப்பாக பரலோக ராஜ்யத்தைக் குறித்த குணாதிசயங்கள், அதைக் குறித்த ஒன்பது உதாரணங்களும் முக்கிய இடம் பெறுகிறது. பிரசங்கங்களில் முக்கியமானது ஜீவ அப்பம், நல்ல மேய்ப்பன், திராட்சைச் செடி என உள்ளடங்கும். இவருடைய போதனைகள் சீஷர்களுக்கும், சாத்தானுக்கும் யோவான்ஸ்நானகனைப் பற்றியும், தன் உபத்திரவத்தைப் பற்றியும் கூறுவதாய் இருந்தது. இவருடைய போதனைகள் எல்லாம் அதிகாரம் மிக்கதாகவும், பிறரின் போதனைகளைப் போல் ஏற்றுக் கொள்ளுங்கள் அல்லது உங்கள் முடிவு என வாய்ப்பு கொடுக்கவோ முடியாது. நீங்கள் இயேசுவைப் பின்பற்ற விரும்பினால், இயேசுவின் போதனைகளை ஏற்றுக் கொண்டேயாக வேண்டும்.

**தம்பி, தங்கை! நீங்கள் இயேசுவின் போதனையை ஏற்று அவரைப் பிறருக்குச் சொல்ல இந்த தேசத்தில் வாய்ப்புகள் அதிகம். நீ வருவாயா!**

3rd WEEK MESSAGE

JESUS MISSION

Mr. M. Jerome Stanley





# மனமுறிவு, துரோகம், உடைந்த மனம்

இந்த தலைப்பின் கீழ் இந்த மாத Booster spot மூலம் உங்களைச் சந்திக்கிறேன். காரணம் மேல் சொன்ன வார்த்தைகளுக்கு சொந்தக்காரர்களாக இன்று அநேக இளம் சமுதாயம் சுற்றிக்கொண்டிருக்கிறது. முந்தைய தலைமுறைத் திருமணங்கள் பெற்றோர் விருப்பத்துடன் பிள்ளைகளின் சம்மதத்தில் நடைபெற்றன. ஆனால் இன்று பிள்ளைகளின் விருப்பத்தில் பெற்றோர்களின் சம்மதத்தில் திருமணங்கள் நடைபெறுகின்றன. சமீப காலங்களில் நிச்சயம் முடிந்த நிலையில் திருமணங்கள் நின்று போவது சாதாரண காரியம். நினைத்த நபர் அல்லது பழகிய நபர் அல்லது காதலித்த நபர் கிடைக்காத பட்சத்தில் இளம் சமுதாயம் தன்னை ஆய்வு செய்யாமல் பிறரைக் குறை கூறுவது அல்லது தங்களின் எதிர்காலத்தைத் தாங்களே கேள்விக்குறியாக்கி திருமண வாழ்வுக்கு காலம் தாழ்த்துதல், ஆவிக்குரிய காரியங்களில் ஈடுபடுவதை நிறுத்துதல், சமுதாயத்தை எதிர்நோக்க பயப்படுதல், ஆலயத்தை ஒதுக்குதல், இதிலும் ஒருபடி மேல் சென்று பெற்றோர், உடன்பிறந்தோர், நெருங்கிய உறவினர்களுடனான பேச்சைக் குறைத்தல் அல்லது நிறுத்துதல் என ஆயிரக்கணக்கான முதிர் இளசுகளை நாம் பார்க்க முடிகிறது. இவர்களுக்கான ஒரு ஆலோசனை பக்கம் தான் இது.

துரோகம் என்பது உடல் ரீதியாக மட்டுமல்லாமல் மனம், பொருளாதாரம், உறவு, உணர்வு என எல்லா எல்லைகளையும் பாதிக்கிறது. இதன் விளைவு தோல்வி, பயம், ஆழமான (Inner heart) மனக்காயங்கள், ஆழ்மனக் (Subconscious) காயம் மற்றும் நபர்களின் ஆள்தத்துவத்தை (Personality) சீர்குலைக்கும். துரோகத்தின் பாதையை விட, மகிழ்ச்சியான பாதை மிக நீளமானது. இதில் தைரியத்தோடு பயணிக்க ஆரம்பிக்கும் போது, உங்கள் திருமண வாழ்க்கை, குடும்ப வாழ்க்கை சந்தோஷமாக அமையும் என்பதில் எவ்வளவேனும் சந்தேகமில்லை. இப்போது 7 Tips உங்களுக்காக...

**படி 1 - மனமாற்ற ஜெபம் தேவை (Start pray):** உங்கள் ஜெபங்களில் மாற்றம் வேண்டும். ஏனென்றால் கடவுள் நம் சிந்தனைகளைத் தூரத்திலிருந்து அறிகிறார். எனவே ஜெபிக்கும் போது யாரையும் நியாயந்தீர்த்து ஜெபிக்கக் கூடாது. குறிப்பாக எதிர்மறையான வார்த்தைகள், சாபம், கோப வார்த்தைகள், மன்னியாமை போன்றவை இருக்கக் கூடாது. எப்போதும் அவர்களை மன்னித்து, ஆசீர்வதித்து வாழ்வின் கசப்பான நிலையைத் தாண்ட பலனும், கிருபையும் பெற்றுக் கொள்ள ஜெபிக்க வேண்டும். தேவன் உங்கள் பக்கம் நிற்கிறார் (சங்கீதம் 34:18).

**படி 2 - உணர்வுகளை அடக்காதீர்கள் (Don't hold your feelings in):** உணர்வுகளை அடக்குவதால் ஏற்படும் பிரச்சனைகள் அதிகம். குறிப்பாக அது உங்கள் ஆள் தத்துவத்தை மட்டுமல்ல, எதிரே இருக்கிற சிறந்த வாழ்வையும் சிதைக்கும். மேலும் ஓர் சிக்கல் எங்காவது, எப்போதாவது வெடித்து சிதறும். அது ஆபத்தை ஏற்படுத்திவிடும். மேலும் தூக்கமின்மை, பயம், இழப்பு, மறதி, உடல் எடை அதிகரிப்பு அல்லது இழப்பு மற்றும் இதய பிரச்சனைகளை உண்டாக்கும். எனவே உங்கள் நண்பர்களிடமோ அல்லது உங்கள் மேல் அக்கறையுள்ள ஒரு நபரிடமோ உங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தும் போது அவர்கள் பொறுமையோடு கவனித்து ஏற்ற நேரத்தில் உங்களுக்கு உதவி தருவார்கள். அல்லது நீங்களாகவே உங்களை உணர்ந்து அந்த நிலையிலிருந்து வெளிவருவீர்கள்.

**படி 3 - நேரம் எடுத்து கவனமாய் முன்னேறுங்கள் (Slow down live intentionally):** தொடர்ந்து வாழ்வில் நீங்கள் முன்னேற, வாழ தொடர்ச்சியான முடிவுகள் எடுக்கவேண்டியிருப்பதால், பதட்டம் இல்லாமல் சில நாட்கள், நேரம், மணித்துளிகள் எடுத்து தீர்மானம் எடுக்கப் பழகுங்கள். தேவ சித்தத்தை அறிந்து முன்னேறுங்கள். தேவ ஒப்புதலைப் பெற துடிக்காதீர்கள், அதே நேரம் மிகத் தாமதமாகவும் முடிவெடுக்காதீர்கள். தொடர்ந்து முன்னேறுங்கள்.

**படி 4 - உங்கள் மீது தனிக் கவனம் செலுத்துங்கள் (Take good care of yourself):** மனமும், உள்ளமும், உடலும் பாதிக்கப்பட்ட நிலையில் அதன் பாதிப்புகள் உங்களுக்கு மட்டுமே தெரியும். பிறர் உங்களைத் தேற்ற வருவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. ஆனால் உங்களை நீங்களே சிரமம் எடுத்துக் கவனித்துக் கொள்ள வேண்டும். எப்படி என்றால் ஏற்ற அளவு நீர் அருந்தியும், சரியான நேரத்தில் உணவு எடுத்தும், உடற்பயிற்சி மற்றும் சீரான மூச்சு பயிற்சி மேற்கொள்ளுதல் போன்ற செயல்களின் மூலம் உங்களைக் கவனித்துக் கொள்ளலாம். "நீங்கள் உங்களை உய்த்து ஆராய்ந்து சோதியுங்கள்" (செப்பனியா 2:2) என்று வேதம் கூறுகிறது.

**படி 5 - தொடர் செயல்களையும் கவனமாக கடந்து செல்லுங்கள் (Walk through the grieving process):** உங்களுக்கு உண்டான கடினமான நிகழ்வின் முடிவில், நீங்கள் ஒரு சில பாதை வழியாக கடக்க நேரிடும். குறிப்பாக பேரம் பேசுதல், பெரியவர்கள் வழிகாட்டுதல், ஆலோசனைகள், பிறரின் குறிக்கீடுகள் இன்னும் மோசமான சூழ்நிலை ஏற்பட்டால் காவல்துறை, நீதிமன்றம் என விரிவடையும் எல்லாவற்றிலும் கவனமாக, ஞானமாக முன்னேறிச் செல்ல தயாராக வேண்டும். இதற்கு அடிப்படை முதலாவது கடவுளின் மன்னிப்பின் நிச்சயத்தை பெற்றிருக்க வேண்டும். நீங்களும் பிறரை மன்னித்து தவறை உணர்ந்து முன்னேற வேண்டும்.

**படி 6 - பேசுங்கள் (Talk it out):** உங்கள் சூழ்நிலையை, கடந்து வந்த பாதையை சிறந்த கிறிஸ்தவ ஆலோசகர்களிடமோ, சபை போதகர்களிடமோ (உங்கள் மேல் உண்மையான அக்கறையுள்ள) சிறந்த நண்பர்களிடமோ பகிர வேண்டும். அதே நேரம் அதிகமானவர்களிடம் பகிரக்கூடாது. உங்களை ஏற்றுக் கொண்டு கண்டனம் பண்ணாமல், கண்டித்து உணர்த்தும் நபர்களைத் தேர்வு செய்யுங்கள். உங்கள் எதிர்காலத்தைக் குறித்த கவலையையோ, பயத்தையோ ஏற்படுத்தும் நபரை உடனே விலக்கி விடுங்கள்.

**படி 7 - புதிய பாதை தேர்வு செய்யுங்கள் (Choose new path):** இது கடினமான காரியங்களில் ஒன்று, ஆகிலும் மிகவும் எளிது. நாம் வாழ்ந்து முடித்து கடவுளிடம் கணக்குக் கொடுக்க வேண்டியவர்கள். வாழ்வை பாதியில் முடிக்க அல்ல. எனவே தொடர்ந்து வேத வெளிச்சத்தில் முன்னேற வேண்டும். இப்பொழுது கொலோ. 3:12-யில் கூறியுள்ளபடி நீங்கள் அணிய வேண்டிய ஆடையை தரித்துக்கொள்ளுங்கள்.

**தம்பி, தங்கையே உலகத்தில் சுடர்களைப் போன்று பிரகாசிக்க வேண்டும் (பிலி. 2:14). கிறிஸ்துவும் உங்களில் பிரகாசிப்பார் (எபே. 5:14) என்று வாழ்த்தி, தேவன் உங்களுக்கு பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்க (எபே. 1:19) ஜெபித்து நிறைவு செய்கிறேன்.**



Mr. Isaac Kamalesh

# யோசேப்பின் வாசற்படியில்

## நின்று கொஞ்சம் யோசித்துப் பார்! (ஆதியாகமம் 43:19)

சென்ற மாதம் வாசற்படியில் பாவம் என்ற தலைப்பில் தியானித்தோம். இந்த மாதம் யோசேப்பின் வாசற்படியில் என்ற தலைப்பில் தியானிக்கவுள்ளோம்.

"நம் மூளை கம்ப்யூட்டரைக் காட்டிலும் அதிக வேகம்" என்று இவ்வுலகத்தார் கூறுகின்றனர்.. ஆனால் அது உண்மை அல்ல. கம்ப்யூட்டர் ஒரு தகவலை மனித மூளையைக் காட்டிலும் மிக விரைவாக செயல்முறைச் செய்கிறது. ஆனால் மனித மூளையினால் அவ்வளவு விரைவாகச் செய்ய இயலாது. மாறாக ஒரு கம்ப்யூட்டரைக் காட்டிலும் மனித மூளை ஆற்றல் திறன் கொண்டது. பலவித காரியங்களைப் பட்டியலிட்டு மூளையின் வெவ்வேறு பகுதிகளில் பதிவு செய்து வைக்கிறது. அது மாத்திரமல்ல தன்னைச் சுற்றியுள்ள உலகைக் கணித்து, புதிய யோசனைகள், கருத்துக்களைக் கொடுக்கத்தக்கது. இப்படிப்பட்ட மனித மூளையானது பல வேளைகளில் சிறிய ஆணியால் கட்டப்பட்டு தப்பிக்க முயற்சி செய்யாத யானையைப் போல உள்ளது. இந்நிலை பல வேளைகளில் அவர்களுக்கு இல்லாத பிரச்சனைகளை யூகிப்பது போல் தான். வேதாகமத்தில் யோசேப்பின் சகோதரர்கள் யோசேப்பைக் குறித்ததான யூகங்களினால் வந்த விளைவுகளையும், நாம் எவ்வாறு, இப்படிப்பட்ட யூகங்களிலிருந்து விடுதலைப் பெறலாம் என்பதைப் பற்றியும் இங்கு தியானிக்கலாம்.

**யூகங்கள்:** யூகம் என்பது நமக்கு நடக்காத ஒரு காரியத்தை நாமாகவே இப்படி நடந்து விடுமோ? அல்லது அப்படி நடந்து விடுமோ? இப்படி நடந்தால் நான் இவ்வாறு பேசுவேன் அல்லது செயல்படுவேன் என்று நாம் கேட்டதை, நமக்கு நடந்ததை அல்லது படித்ததைக் கொண்டு யூகித்துவிடுகிறோம். இது சில நபரையோ, இடத்தையோ, சூழ்நிலையையோ அல்லது வேலையையோ குறித்ததாயிருக்கும். இதனால் ஒருவர் வாழ்வில் பல சேதங்கள், தீமைகள் மற்றும் இழப்புகள் நடைபெறுகிறது.

யோசேப்பின் சரித்திரத்தை ஆதி. 37-50 வரையுள்ள அத்தியாயங்களில் பார்க்கிறோம். அனைத்திலுமே மனிதர்களின் யூகம் வெளிப்படுகிறது. யூகம் என்றால் ஆங்கிலத்தில் அஷம்ஷென் (அ) கெஸ் (ASSUMPTION OR GUESS) பண்ணுவது என்று அர்த்தம். நாம் யாவருக்கும் நம்மை குறித்து யோசிப்பதற்கே நேரமில்லை. ஆனால் நாம் அவர் என்ன நினைப்பார், இவர் என்ன நினைப்பார் என்று கற்பனை உலகத்திலேயே பாதி யோசேப்பு கண்டக் கனவுகளை மையமாகக் கொண்டே அவனின் சகோதரர்களின் எண்ணங்களில் பல யூகங்கள் எழும்பின.

**யோசேப்பின் சகோதரர்களின் யூகம்:**

யோசேப்பின் சகோதரர்கள் செய்த யூகம் என்ன? ஆதி. 43:17-22-ம் வசனத்தில், முதலாவது அவன் இரண்டு கனவுகளைக் கண்டு, அதை வெளியேக் கூறியபின், அவன் கண்டக் கனவே அவனுக்கு ஆபத்தாக மாறியது (ஆதி. 37:4). அதனால் பொறாமையின் எண்ணம் வந்து, அவனைக் கொலைச் செய்யும் அளவிற்கு சென்றது (v18). அநேக நேரங்களில் இந்த உலகில் பார்ப்பதை, கேட்பதை, படித்ததைக் கொண்டு யூகித்துச் செயல்படுபவர்கள் அதிகம். இதைதான் யோசேப்பின் சகோதரர்களும் செய்தனர். தகப்பன் யோசேப்பை நேசித்த அளவு நம்மில் அன்பு கூறவில்லையோ? சொப்பனத்தில் கண்டபடி பெரியவனாய் மாறி விடுவானோ? அவனை சாஷ்டாங்கமாய் பணிய வேண்டுமோ? நாம் அவன் அடிமைகளோ? அவன் பெரிய அதிபதியோ? அவன் நம்மை விட பெரியா ஆளோ? நம்மை விட ஞானியோ? போன்ற யூகங்கள் அவர்களுக்குள் இருந்தன.

**யூகங்களின் விளைவுகள்:** மனிதர்களோடுள்ள உறவு உடைகிறது, மற்றவர்களைத் தேவன் உயர்த்தும் போது பொறாமை எண்ணம் உள்ளத்தில் தோண்டுகிறது, தேவன் உயர்த்துகிறவர்களைப் பார்த்தால், கோபமும், கொலை வெறியும் வருகிறது, கேலி செய்து, நக்கல் அடித்து, அநேகர் முன்பு அவமானப்படுத்த தோன்றுகிறது, உயர்ந்து விடுவானோ என்ற பயம் வருகிறது, வளரவிடாமல் குழியில் போட்டு மூடிவிட வேண்டும் என்று எண்ணம் வருகிறது, எரிச்சல் வருகிறது, அதனால் ரத்த கொதிப்பு மற்றும் சரீரத்தில் சுகவீனம் தோன்றுகிறது, தேவனுக்கு விரோதமாக தன் சகோதரனுக்கு துரோகம் செய்யத் தோன்றுகிறது. நாம் இப்படியில்லாமல் யோசேப்பின் வாசலில் நின்று யோசித்து பார்த்து பரிசுத்தமாய் வாழ்வோம்.

இன்று நாமும் இப்படிப்பட்ட யூகங்களில் சிக்குண்டு, வாழ்வில் முன்னேற முடியாமல் தவிக்கலாம். இதிலிருந்து வெளிவர சில செயல்முறைத் திட்டங்களை பார்ப்போம்.

**யூகங்களிலிருந்து வெளிப்பட:**

- **கேட்பதற்கு தீவிரமாய் இருப்பது:** ஒருவர் பேசும்போது உன்னிப்பாகக் கேட்டு அவர்கள் முடிப்பதற்கு முன் ஒரு தீர்மானத்திற்கு வராமல் இருக்க வேண்டும்.
- **கேள்வி கேட்கும் ஆற்றலை வளர்த்துக் கொள்வது:** கேள்வி கேட்பதன் மூலம் ஒரு சூழ்நிலையைக் குறுகிய பார்வையோடு பார்ப்பதை தவிர்த்து, பரந்த மனப்பான்மையோடு பார்க்கவும். சரியான கேள்விகள் நல்ல புரிதலைக் கொடுக்கிறது.
- **உண்மைகளை நிதானிப்பது:** ஒரு முடிவுக்கு வரும் முன் நாம் கேட்ட, அறிந்த, படித்த உண்மை நிலைகளை மறுபரிசீலனைச் செய்துப் பார்க்க வேண்டும்.

**யூகங்களைத் தவிர்க்க:** கேள் (ASK), யூகிக்காதே, பதிலளி (RESPOND),மறுபரிசீலனைச் செய் (RECONSIDERATION), தொடர்புக் கொள் (COMMUNICATE), நேர்மறையான நோக்கங்களைக் காண முடிவு செய், எதிர்பார்ப்பிலிருந்து பகிரப்பட்ட புரிதலுக்கு மாறு.

ஒருவேளை இவ்வாறு யோசேப்பின் சகோதரர்கள் மேலேக் குறிப்பிட்டக் காரியங்களைச் செய்திருப்பார்களானால் யோசேப்பை நேசித்து, அவன் வாழ்வில் தேவத்திட்டம் நிறைவேறக் கரம் கொடுத்திருக்கலாம். அவர்களையும் தேவன் பயன்படுத்தியிருக்கக் கூடும். பயம், விரக்தி, வெறுப்பு, கோபம், கொலை வெறி போன்ற செயல்களுக்கு விலகி சமாதானத்தோடு அவர்களின் வாழ்வு ஆக்கப்பூர்வமாக மாறி இருக்கும். **நீங்களும் இப்படிப்பட்ட யூகங்களில் வாழ்ந்து வந்தால் இதிலிருந்து வெளிவரவும், விடுதலைப் பெறவும் தேவ ஒத்தாசையை நாடுங்கள்!**

Mr. SM Cymer Selwyn

# மாம்சமும், ஆவியும்

## Spirit Vs Flesh



Rev. Daniel Gnanapragasam



"மாம்சமும், ஆவியும்" என்ற சொற்றொடர் மனித இயல்பின் உடல் மற்றும் உள்ளுணர்வுகளின் முழுமையாகும். 'சரீரம்' என்பது மாம்சத்தின் இயற்கையான ஆசைகள் மற்றும் கடவுளுடனான ஆவியின் தொடர்பு இவற்றின் உள்ளடக்கமாகும். மாம்சம் பொதுவாக பாவம், உலக சிற்றின்பங்கள் மற்றும் அடிப்படை மனித ஆசைகளுடன் தொடர்புடையது. ஆவி என்பது பெரும்பாலும் கடவுள் சார்ந்த நம்பிக்கை மற்றும் கருணை நிறைந்த மனிதத்தன்மையுடன் தொடர்புடையது.

இப்படியாக மாம்சமும், ஆவியும் இருவேறு எதிர் திசைகளில் பயணிக்கிறது (கலா. 5:17) மாம்சத்தை நலமாக, வளமாக வைத்திருக்க நாம் விரும்புகிறோம். ஆனால் பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்படும் பரிசுத்த அலங்காரம் அதைவிட முக்கியம் என்பதை அநேக வேளைகளில் நாம் மறந்து விடுகிறோம். ஏனென்றால் ஆவியின் வழிநடத்தலைப் பின்பற்றும்போது நாம் நம் மாம்சத்தின் விருப்பங்களைத் திருப்திபடுத்தவோ அல்லது நிறைவேற்றவோ முயல மாட்டோம். அவ்வழி நடத்தலை பின்பற்ற தேர்ந்தெடுக்கும் போது பிசாசானவன் நம் மனதை (ஆத்துமாவை) யுத்தகளமாக்கிவிடுவான். ஆனாலும் மாம்ச கிரியைகள் மற்றும் சோதனைகளை வென்று ஆவியால் நடத்தப்பட, ஆவியானவர் உதவி செய்ய வல்லமையுள்ளவராய் இருக்கிறார்.

| மாம்சம் | ஆவி |
|---|---|
| பெலவீனமுள்ளது | உற்சாகமுள்ளது (மத். 26:41) |
| பாவமுள்ள மனித சுபாவத்தைக் குறிக்கிறது (கலா. 5:17) | கடவுளின் பரிசுத்த ஆவியைக் குறிக்கிறது |
| மாம்ச சிந்தை மரணம் | ஆவியின் சிந்தையோ ஜீவனும், சமாதானமுமாம் (ரோமர் 8:6) |
| கடவுளின் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்படியாது (ரோமர் 8:7) | பரிசுத்த ஆவியின் செயல்பாட்டிற்குக் கீழ்ப்படியும் |
| ஆவிக்குரியவைகளை ஏற்றுக் கொள்ளாது (1 கொரி. 2:14) | எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கும். |
| கிரியைகள் வெளியரங்கமாயிருக்கும் (கலா. 5: 19-21) | ஆவியின் கனியாயிருக்கும் (கலா. 5:22, 23) |
| ஒன்றுக்கும் உதவாது (யோவான் 6:63) | நம்மை உயிர்ப்பிக்கும் |
| மண்ணுக்கே திரும்பும் (பிரசங்கி 12:7) | தன்னைத் தந்த தேவனிடத்திற்குத் திரும்பும் |
| பரலோக ராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை (1கொரி. 15:50) | பரலோக ராஜ்யத்தின் புத்திரர் (ரோமர் 2:14) |
| இரண்டாம் மரணத்திற்கு வழிவகுக்கும் (சாவீர்கள்) (ரோமர் 8:13) | நித்திய ஜீவனுக்கு வழிவகுக்கும் |

வாலிப தம்பி, தங்கையே!

மாம்சம் என்பது நமது பாவமான "பழைய இயல்பு". அது கிறிஸ்துவின் புதிய அடையாளமான ஆவிக்கு எதிராக தொடர்ந்து போராடுகிறது. மாம்சத்திற்கும், ஆவிக்கும் அடுத்ததாக ஒவ்வொரு மனித சரீரத்திலும் மூன்றாவது ஆள்தத்துவமாக இருக்கும் 'ஆத்துமா' எதைப் பின்பற்ற வேண்டும் என்பதைத் தேர்ந்தெடுக்கிறது.

மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும். ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும். பழைய மனிதனை அகற்றிவிட்டு, புதிய மனிதனாக கிறிஸ்துவுக்குள் வாழ உன்னை அர்ப்பணிப்பாயா? ஆண்டவர் தாமே நம் ஒவ்வொருவரையும் வழி நடத்துவாராக. ஆமென்!



# தீமையை மேற்கொள்ளும் ஊழியம்

“ஊழியம்” (கிரேக்க மொழியில் diakonia) என்ற சொல்லுக்கு பரிசுத்த ஆவியின் பெலத்தால் மற்றவர்களுக்கு சேவை செய்வது என்று பொருள். ஏற்கனவே தெரிவித்திருந்தபடி, இந்த ஆண்டு முழுவதும், நான்காவது வாரங்களில், ஆதி திருச்சபையை (தோராயமாக கி.பி. 100 வரை இருந்த) நமக்கு மாதிரியாக வைத்து, அக்காலத்து கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் எவ்வாறு ஊழியம் செய்தனர் என்பதைக் கற்றுக்கொள்ளப் போகிறோம். இந்த வாரம் நாம் தீமையை மேற்கொள்ளும் ஊழியத்தைக் குறித்துப் பார்க்க இருக்கிறோம்.

கடவுள் ஒரு மிகவும் நல்ல உலகத்தை உருவாக்கினார் (ஆதி. 1:31). சாத்தானின் வஞ்சகத்தினாலும், துரோகத்தினாலும் பாவம் அவருடைய உலகத்தில் பிரவேசித்தது (ஆதி. 3:1-8). பாவம் மரணத்தையும், அழிவையும் உலகத்தில் கொண்டு வந்தது (ஆதி. 3:19, ரோமர் 8:20). மேலும், சாத்தானும் அவனுடைய தீயஆவிகளும் தொடர்ந்து உலகில் தீமையைப் பரப்பி வருகின்றனர். ஆனால், ஒரு நாள் கடவுள் சாத்தானையும், அவனுடைய ராஜ்யத்தையும் முற்றிலுமாக அழித்துவிடுவார். அதன்பின் அவர் தம்முடைய கிறிஸ்துவோடும், பரிசுத்தவான்களோடும் இணைந்து, புதிய மகிமையுள்ள வானத்தையும் பூமியையும் ஆளுவார் (1 கொரி. 15:24-27, வெளி. 11:15). இப்போது, அவர் இயேசு கிறிஸ்து மற்றும் அவரது திருச்சபையின் மூலம் பாவம் மற்றும் அதன் விளைவுகளிலிருந்து மனுக்குலத்தை மீட்டெடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார். நற்செய்தியின் பிரகடனத்தின் மூலம், கடவுள் சாத்தானின் ராஜ்யத்திலிருந்து மக்களைக் கடவுளின் ராஜ்யத்திற்கும், இருளிலிருந்து ஒளிக்கும் கொண்டு வருகிறார். தீமையை மேற்கொள்ளும் ஊழியத்தின் மையப்பகுதி இதுதான். இதை நிறைவேற்றுவதற்காக, தேவைப்பட்டால், நோய்களைக் குணப்படுத்துதல் மற்றும் பிசாசுகளைத் துரத்துதல் போன்ற அற்புத அடையாளங்களைக் கடவுள் பயன்படுத்துகிறார். இது இன்றும் நமது பணித்தளங்களில் உண்மையாகவே உள்ளது. எனவே, சிலர் இந்த ஊழியத்தை வல்லமைகளை எதிர்க்கும் ஊழியம் (Ministry of Power Encounter) அல்லது அடையாள அற்புத ஊழியம் (Ministry of Signs and Wonders) என்று அழைக்கிறார்கள். மேலே விளக்கப்பட்டபடி, பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து முழுமையான விடுதலை அளிப்பதே ஒரு அற்புத அடையாளத்தின் வெளிப்படையான நோக்கமாகும். எனவே, இது வெகு அரிதாகவே தனிமையில் நிகழ்கிறது; எப்போதும் அது நற்செய்தி பிரகடனத்துடன் சேர்ந்தே நிகழ்கிறது. எனவே, இது ஒரு துணை ஊழியமே, **ஒரு தனி ஊழியம் அல்ல.** ஒரு அற்புத அடையாளம் இரண்டு காரணங்களுக்காக நிகழ்கிறது - ஒன்று, ஒரு நபரை பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்தும் அதன் விளைவுகளிலிருந்தும் விடுவித்து, அவரை இரட்சிப்புக்குள் வழிநடத்துவதற்காக (லூக்கா 8:48,17:19,18:42); இரண்டு, நற்செய்தியைக் கேட்கிற இரட்சிக்கப்படாத நபர்களுக்கு நற்செய்தியின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்த (அப்போஸ்தலர் 8:6, எபிரெயர் 2:3-4).

### ஒரு தீமையை மேற்கொள்ளும் செயலில் என்ன நடக்கிறது? அது எப்படி நடக்கிறது?

பிசாசுகளின் தலைவன் பெயெல்செபூல் வழியாக பிசாசுகளைத் தாம் துரத்துவதாக பொய்யாகக் குற்றம் சாட்டப்பட்டபோது, இயேசு ஒரு தீமையை மேற்கொள்ளும் செயலுக்குப் பின்னால் உள்ள உண்மையான கொள்கைகளை விளக்கினார் (லூக்கா 11:17-26). சாத்தானாலோ, அவனுடைய பேய்களாலோ எந்தத் தீங்கும் நீக்கப்படுவதில்லை. சாத்தானின் ராஜ்யம் தீமையைப் பரப்புவதில் ஒன்றுபட்டுள்ளது (v18). பாதிக்கப்பட்டவர் அதன் அடிமைத்தனத்தின் கீழ் சக்திவாய்ந்த முறையில் காவலில் வைக்கப்படுகிறார் (v21). கடவுளின் சக்தி (தேவனுடைய விரல்) தீய சக்திகளை முற்றிலும் நீக்கும்போது மட்டுமே, பாதிக்கப்பட்டவர் விடுவிக்கப்படுகிறார் (v20,22). விடுவிக்கப்பட்ட ஒரு நபர் மீண்டும் தீய சக்திகளால் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது (v24-26).

விடுதலை பெற்றவர் மீண்டும் சாத்தானால் பாதிக்கப்படுவதைத் தடுக்க விரும்பினால், அவர் பாவத்திலிருந்து விலகி வாழ வேண்டும் (யோவான் 5:14). அவர் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படும்போதுதான் இது நிகழ முடியும். பரிசுத்த ஆவியின் நிரப்புதல் (அதாவது, பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப்படுவது) ஒரு நபர் தனது வாழ்க்கையை முற்றிலும் வேதாகமத்தின் அதிகாரத்திற்கு ஒப்படைக்கும்போது மட்டுமே நிகழ்கிறது (எபே. 5:18-20, கொலோ. 3:16-17). அப்போதுதான், அவர்

NT MISSION

4th WEEK MESSAGE

Mr. Israel Nathaniel Edward

விடுதலையின் முழு நன்மைகளான கர்த்தருக்குள் மகிழ்ச்சியை இவ்வுலக வாழ்க்கையிலும், நித்திய ஜீவனை மறுவாழ்விலும் பெற்று அனுபவிக்க முடியும்.

## முதல் நூற்றாண்டில் என்ன நடந்தது?

இயேசு தெய்வகுமாரனாக (மனித உடலில் கடவுள்) இருந்ததால், பிசாசுகளின் மேல் சர்வ அதிகாரம் படைத்தவராயிருந்தார். அவரது முன்னிலையில் அவை நடுங்கின. வெறும் கட்டளையினால் அவர் அவைகளைத் துரத்தினார் (மாற்கு 1:23-25). மேலும், அவர் ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு நோயையும் உடனடியாக குணப்படுத்தினார். அவரை அண்டிய எவரும் குணமடையாமல் திரும்பிப் போகவில்லை. தொலைதூரத்தில் இருந்தும் அற்புதச் செயல்களை அவரால் செய்ய முடிந்தது. மக்கள் தங்கள் இரட்சிப்புக்காக அவரை விசுவாசிக்கும்படி, அவர் இந்த அற்புதங்களைச் செய்தார் (யோவான் 9:35,20:30-31). சுவிசேஷங்களின்படி, இயேசு சில சமயங்களில் நோய்களைக் குணப்படுத்துவதற்கும், பிசாசுகளைத் துரத்துவதற்கும் தனது வல்லமையை அப்போஸ்தலர்களோடு பகிர்ந்து கொண்டார் (மத். 10:1, மாற்கு 3:15). அப்போஸ்தலர் புத்தகத்தில், பிசாசுகளைத் துரத்திய மற்றும் இறந்தவர்களை உயிர்த்தெழச் செய்த இரண்டு சம்பவங்கள் உட்பட எட்டு குணப்படுத்தும் சம்பவங்கள் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளன. அதோடு கூட, ஏழு குணமடைதல்களின் சுருக்கங்களும், சம்பந்தப்பட்ட நபர்களுக்கு அசௌகரியம் அல்லது மரணத்தை ஏற்படுத்திய நான்கு தண்டனை அற்புதங்களும் எழுதப்பட்டுள்ளன. அப்போஸ்தலர்கள் தங்கள் குணப்படுத்தும் ஊழியத்தில், தங்கள் எஜமானரான இயேசுவின் மாதிரியை மிகவும் நெருக்கமாக பின்பற்றியதாக அப்போஸ்தலர் நடபடிகளிலிருந்து நாம் அறிய முடியும். குணமடைய விரும்புவோரிடம் விசுவாசம் உள்ளதா என அவர்கள் அறிய முயன்றனர். இந்த விசுவாசத்தை ஊக்குவிக்க அவர்கள் சில சமயங்களில் இயேசுவின் பெயரில் கட்டளைகளை பிறப்பித்தனர். இயேசுவைப் போலல்லாமல், அவர்கள் சில சமயங்களில் குணப்படுத்துதலில் ஈடுபடுவதற்கு முன்பு ஜெபித்தனர். அப்போஸ்தலர்கள் அற்புதங்களைச் செய்வதைத் தங்கள் ஊழியத்திற்கு அடிப்படையாகக் கொள்ளவில்லை (அப். 4:29-31). இருப்பினும், ஒரு அற்புதம் நடந்தபோது, பயனாளிகளுக்கும், பார்வையாளர்களுக்கும் நற்செய்தியைப் பிரசங்கிக்கும் வாய்ப்பாக அதை பயன்படுத்தினர் (அப். 3:12, 14:14).

**பிசாசு இலவச பரிசு எதையும் தருவதில்லை! அவன் உங்களுக்கு எதைக் கொடுத்தாலும், அதை உங்கள் ஆத்துமாவுக்கு பதிலாகவே கொடுக்கிறான்.**
***-இம்மானுவேல் ஆமோஸ் ஈனி***

## இப்போது என்ன நடக்கிறது?

இன்றைய பெரும்பாலான அற்புதங்களில் இயேசு மற்றும் அப்போஸ்தலர்களின் அற்புதங்களில் காணப்பட்ட அதே பண்புகளை நாம் காணவில்லை. பெரும்பாலான அற்புத குணப்படுத்துதல்கள் உளவியல் பிரச்சினைகளால் ஏற்படும் நோய்களிலிருந்து பெறப்படுகிற தற்காலிக நிவாரணங்களாகக் காணப்படுகின்றன. மக்கள் ஆறுதலான வாக்குத்தத்தங்களைக் கேட்கும்போது, நோயின் அறிகுறிகள் சிறிது காலத்திற்கு போய்விடுவதாகத் தெரிகிறது. ஆனால், பின்னர் அவை அதிக இடர்செய்யும் வகையில் திரும்புகின்றன. மேலும், பெரும்பாலான அற்புதங்கள் ஒரு நபரை பரிசுத்தமான வாழ்க்கைக்கும், கடவுளுடைய வார்த்தைக்குத் தாழ்மையுடன் அடிபணிவதற்கும் வழிநடத்துவதில்லை. முன்னறிவிக்கப்பட்டபடி, இந்த கடைசி நாட்களில் மக்கள் துன்பமில்லாத வாழ்க்கை மற்றும் கண்கவர் அற்புதங்களைப் பெற ஆரோக்கியமற்ற விருப்பத்தைக் கொண்டிருப்பதால் தான் இவை நிகழ்கின்றன ( மத்தேயு 24:24, 2 தெச. 2:10-12).

## நாம் என்ன செய்ய வேண்டும்?

கள்ளத் தீர்க்கதரிசிகளைக் குறித்து எச்சரிக்கையாய் இருக்கவேண்டும் (மத். 7:15-20). இயல்பாகவே அவர்களுடைய அடையாளங்கள் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை வழிதவறச் செய்யும் விதத்தில் வடிவமைக்கப்பட்டிருப்பதால், அவர்கள் செய்யும் அற்புதங்களைப் பற்றி நாம் கவனமாக இருக்க வேண்டும் (மத். 24:24). ஒரு உண்மையான அற்புதம் நடக்கும் பட்சத்தில், நற்செய்தியை விளக்கி, பயனாளியை இரட்சிப்புக்குள் வழிநடத்த வேண்டும். பின்னர், கிறிஸ்தவ வாழ்வின் முதல் கொள்கைகளைத் தொடர்ந்து கற்பிக்க வேண்டும். இதனால் அவர் கிறிஸ்துவில் கிடைக்கும் சுதந்திரத்தின் முழு நன்மைகளையும், நித்திய வாழ்க்கையையும் பெறுவார்.



# மீன் வாசல் -THE FISH GATE

### அறிமுகம்:

இந்த "மீன் வாசல்" புதுப்பிக்கப்பட்ட இரண்டாவது வாசல் [நெகேமியா 3]. இந்த மறுசீரமைக்கும் பணி ஒரு உன்னத நற்சாட்சி தரக்கூடியதாயும், எருசலேம் நகரின் பழங்கால அற்புத தோற்றத்தைக் கொண்டு வர கூடியதாயும் இருக்கிறது.

### வரலாற்றுப் பின்னணி:

மீன் வாயில் என்பது கீகோன் நீரூற்றுக்கு மேற்கே கிழக்குச் சுவரில் இருந்த ஒரு பழங்கால வாயிலாகும். மீன் வாயில் மக்கள் நகரத்திற்குள் செல்வதற்கான முக்கிய நுழைவுவாயில்களில் ஒன்றாகவும், இது நடுக்கடலில் இருந்து மீன்களைப் பிடித்து கொண்டு வந்து விற்பனைச் செய்யும் மீன் வியாபாரிகள் மற்றும் வணிகர்களுக்கு ஒரு முக்கிய நுழைவுவாயிலாகவும் உள்ளது. இது எருசலேம் நகரின் மற்ற வாசல்களை விட ஒரு முக்கியமான நுழைவு வாயிலாக இந்த மீன் வாசல் உள்ளது.

### சிந்தனையைத் தூண்டும் கேள்விகள்:

மீன் வாயிலைப் புதுப்பித்ததன் குறிப்பிடத்தக்க விளைவு என்ன? எருசலேம் நகரின் அழிக்கப்பட்ட சுவரை மீண்டும் கட்டியெழுப்புவது மிகவும் முக்கியமானதா? மீன் விற்பனையாளர்களும், மக்களும் எருசலேம் நகருக்குள் நுழைவதற்கும், வணிக போக்குகளை விரிவுபடுத்துவதற்கும் அதை வாங்குவது மிகவும் முக்கியமானதாக இருந்ததா?

### பின்வருவனவற்றின் மூலமாக கடவுளின் திட்டத்தை அறிய முடிகிறது:

- இந்த சுவரைப் புதுப்பிப்பதினால் மற்றவர்களும் இந்த நகரத்திற்குள் நுழைய முடியும்.
- இது மக்களிடையே தொடர்பையும், சந்தோஷத்தையும் கொண்டு வருகிறது.
- அனைவரும் இணைந்து (the team work) இந்த சுவரை மறுசீரமைப்பதினால் இணைந்து பணிபுரியும் தன்மையை வெளிப்படுகிறது.
- அங்கீகரிக்கப்பட்ட இணைந்து பணிபுரியும் தன்மையானது ஒற்றுமையையும், கொடுக்கப்பட்ட பணியைத் தீவிரமாக பூர்த்தி செய்யும் மனநிலையையும் வெளிபடுத்துகிறது.
- அங்கு வரும் மக்களோடு புதுப்பிக்கப்படும் தொடர்பு, மீன் வியாபாரிகளையும் மற்றும் விற்பனைக்குக் கொண்டு வரப்பட்டுள்ள மீன்களையும் அணுக உதவிச் செய்கிறது.

நிச்சயமாக இந்த மீன் வாயிலைப் புதுப்பிக்கும் பணி மக்களை ஊக்குவிப்பதாகவும் மற்றும் வலிமையான ஒன்றை உருவாக்குவதாகவும் அமைகிறது.

வேதாகமத்தின்படி பதில்கள்:

இயேசு கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தி மக்களைச் சென்றடையவும், அவரைப் பற்றிய "சாட்சியைப் பகிர்ந்து கொள்ளும் ஒரு முக்கிய இடமாகவும் இந்த மீன் வாயில் உள்ளது. மேலும், இங்கு வரும் மக்கள், மீன்விற்பனையாளர்கள், மிஷனெரிகள், சுவிசேஷகர்கள், போதகர்கள் போன்றவர்களைக் கடவுளின் பணியில் ஈடுபடுகிறவர்களாக உருவகப்படுத்தி பார்க்கலாம். வாங்குபவர்கள் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை ஏற்றுக்கொள்வதற்கான ஒரு தொடர்பு எல்லையாக இந்த வாயிலுள்ளது.

எனவே, இயேசு கிறிஸ்து சுவிசேஷத்தையும் மற்றும் அவருடைய நற்செய்தியையும் மக்களுக்கு அறிவிக்க நம் ஒவ்வொருவரையும் அழைக்கிறார். "இயேசு சீமோனை நோக்கி: பயப்படாதே, இதுமுதல் நீ மனுஷரைப் பிடிக்கிறவனாயிருப்பாய் என்றார்" (லூக்கா 5:10) "இயேசு அவர்களை நோக்கி: என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார்" (மாற்கு 1:17).

### உங்கள் முன் விழுந்த கடமை:


நண்பர்சுவிசேஷஜெபக்குழுவானதுநம்மைபடைத்ததேவனை அறியாதவர்கள் அறிந்து கொள்வதிலும், மறுசீரமைக்கவும், புதிய கிராமங்களுக்கு மற்றும் புதிய மக்களுக்கு சுவிசேஷம் சென்றடையும் திட்டத்தையும் கொண்டுள்ளது. ஒவ்வொரு கிறிஸ்தவனும் பாவத்தில் மாண்டுக்கொண்டிருக்கும் "மனிதனைப் பிடிக்கும் மீனவர்களாக" மாற வேண்டும் என்று எதிர்பார்க்கிறது. இந்தியாவின் வடக்கு, கிழக்கு மற்றும் மேற்கு மாநிலங்களுக்கு செல்லும் கலாச்சார மிஷனெரிகளாக, மீன்பிடிப்பவர்களாக எழும்ப FMPB உங்களை அழைக்கிறது. தேவனோடுள்ள உறவை புதுப்பித்துக் கொள்ளவும், கிறிஸ்துவை மையமாகக் கொண்ட ஐக்கிய வாழ்வு, புதிய கிராமங்களைச் சுவிசேஷத்தால் சந்திக்கும் பணி, ஆராதனை குழுக்களை உருவாக்குவது மற்றும் வேதத்தை ஆராய்ந்து படிக்கும் கூட்டத்தை உருவாக்குவது போன்ற கலாச்சாரம் கடந்த மிஷனெரிப் பணிக்கு தேவன் உங்களை அழைக்கிறார்.

### இந்தியாவில் அழிந்துக் கொண்டிருக்கும் மக்களுக்கு நீங்களே பொறுப்பு.

அன்பு வாலிப பிள்ளைகளே மற்றும் நண்பர்களே, நம் தேச மக்களின் ஆவிக்குரிய சீரமைப்பு பணியில் உங்களை ஈடுபடுத்திக் கொண்டு "மீன் வாசல்" கட்டுமானத்தில் ஈடுபடுங்கள். FMPB உங்களை மீனவனாக ஊழியத்தில் ஈடுபட அழைக்கிறது. நீங்கள் ஆயத்தமா? உங்களின் பதில் என்ன? நம் நாட்டிலுள்ள மக்களை அழிவிலிருந்து காக்கும் பொறுப்பு (ஊழியம்) உங்களுக்காக காத்திருக்கிறது.

அப்போ! இப்போ! எப்போ!!!

Rev. Prabakara Sarathy



"ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்" (பிலிப்பியர் 3:13, 14)




**இறைவனின் தோட்டத்தில் நடந்த வாலிபர் முகாமில் தேவன் கொடுத்த ஆசீர்வாதங்கள்**

